Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 14

வெள்ளிக்கிழமை
10 டிசெம்பர் 2021

கார்த்திகை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 744
மொத்தம் 570,672

**உயிரிழப்பு**
நேற்று 22
மொத்தம் 14,555

**குணமடைவு**
543,823

# பயங்கரவாதத் தடைச்சட்டம் தவறு!
# திருத்தியமைக்க எதிரணி வலியுறுத்து



கொழும்பு, டிசெம்பர் 10
"பயங்கரவாத தடைச்சட்டமானது, இலங்கையில் தவறான முறையில் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, அந்தச்சட்டத்தில் கட்டாயம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்" - என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-
"உரிய சாட்சியங்கள் இன்றி, அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கமைய ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்பவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, 605 நாள்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்

15 ➤

**முச்சந்தி முரளி**



"ஆக்களைக் கடத்தினவருக்கு ஆளுநர் பதவி குடுத்த மாதிரி இனிமேல் கஞ்சா கடத்தினாத்தான் கவர்மெண்ட்வேலை எண்டும் சொல்லுவினம் போல"

## நாடாளுமன்றின் புதிய அமர்வு ஜனவரி 11 இல்

கொழும்பு, டிசெ. 10
2022ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வை ஜனவரி மாதம் 11ஆம் திகதி நடத்துவதற்கு, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். இதேவேளை, அடுத்த வருடத்தின் முதலாவது

15 ➤

## காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10
வாகன விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த குடும்பத்தலைவர், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவத்தில், நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சின்னத்தம்பி இலட்சுமணன் (வயது - 66) என்பவரே உயிரிழந்தார்.
ஊர்காவற்றுறையிலி

15 ➤

## தமிழர்களைக் கடத்திய வசந்த கரன்னகொடவுக்கு மாகாண ஆளுநர் பதவி!



கொழும்பு, டிசெ. 10
வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக, அட்மிரல் வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்பாக நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.
வடமேல் மாகாண முன்னாள் ஆளுநர் ராஜா கொல்லுரே கொரோனாத்

15 ➤

## முல்லைக் கடற்கரையில் இறந்து ஒதுங்கின 5 டொல்பின்கள்

முல்லைத்தீவு, டிசெ. 10
முல்லைத்தீவு, அளம்பில் கடற்கரைப் பகுதியில் உயிரிழந்த நிலையில் 5 டொல்பின்கள் நேற்றுக்கரை ஒதுங்கியுள்ளன.
குறித்த டொல்பின்களின் உயிரிழப்பு குறித்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் விசார



15 ➤

## பால்மா இறக்குமதிக்கு இனி அனுமதி இல்லை!

உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்குமாறு பணிப்பு

கொழும்பு, டிசெ. 10
அடுத்த வருடத்துக்கான பால் மா இறக்குமதிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இதேவேளை, தேசிய பால் மா உற்பத்தியை

15 ➤

## புதிய பஸ் நிலையத்திலிருந்து போக்குவரத்து சேவை ஆரம்பம்

15ஆம் திகதி நடைமுறைக்கு வருகின்றது

யாழ்ப்பாணம், டிசெ. 10
தனியார் பஸ் சேவையின் 3 வகையான சேவைகள் (உள்ளூர் சேவைகள், வெளியூர் சேவைகள், கொழும்புக்கான இரவு சேவைகள்) எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம்

15 ➤

## மூழ்கும் கப்பலே ராஜபக்ச அரசு!

அதில் ஏறத் தயாரில்லை
ரணில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 10
பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலில் ஏறும்

15 ➤

**சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று**

## காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வழங்கக்கோரி போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10
வடக்கு- கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் நீதிகோரி, அவர்களின் உறவுகள் சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று, வடக்கு- கிழக்கு மாகாணங்களில் போராட்டங்களை நடத்தவுள்ளனர்.
வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்

15 ➤

## மருந்து, எண்ணெய் இறக்குமதி பெரும் சிக்கலாக உருவெடுக்கும்!

சஜித் அபாய அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 10
டொலர் கையிருப்பு இல்லாததால் ஏற்பட்டுள்ள அவலத்தின் பாரதூரத்தை அரசாங்கம் இன்னும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. எண்ணெய் இறக்குமதி மற்றும்அத்தி

15 ➤

## கர்ப்பிணிகளுக்கு 'பூஸ்டர்' வழங்கலாம்

சுகாதார அமைச்சு ஒப்புதல்

கொழும்பு, டிசெ. 10
கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனா எதிர்ப்பு பூஸ்டர் தடுப்பூசியை வழங்க, சுகாதார அமைச்சு மற்றும் மகப்பேற்றியல், மகப்

15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களுடைய வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமிக்காதீர்

*சார்ள்ஸ் எம்.பி. கோரிக்கை*

**கொழும்பு, டிசெ. 10**

**இலங்கையில் தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமிக்க முற்படுவது இந்துக்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.**

வவுனியா, நெடுங்கேணி வெடுக்கு நாறி மலையிலுள்ள ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் இராஜாங்க விதுர விக்கிரம நாயக்கவிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, நெடுங்கேணிப் பகுதியிலுள்ள ஆசி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பகுதியில் உள்ள கல்வெட்டுகளில் பௌத்த அடையாளம் இருந்துள்ளது என நீங்கள் (இராஜாங்க அமைச்சர் விதுர) கூறினீர்கள்.

தமிழர்கள் இங்கு பௌத்தர்களாகவும் இருந்துள்ளனர் என்று சிங்கள இலக்கியமான பாலி இலக்கியங்களில் கூட சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழர்கள் பௌத்தர்களாக இருந்து பௌத்த மதத்துக்கும் தொண்டாற்றியுள்ளனர். இதனை நீங்கள் ஏற்றுக்கொண்டால்தான் என்னால் எழுப்பப்படும் கேள்விக்கு பதிலளிக்க கூடியதாக இருக்கும்.

வவுனியா ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள வவுனியா மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்ற தடை உத்தரவைப் பெற்றுள்ளனர். வழிபாடு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதால் இன ரீதியிலான வேறுபாடுகளுக்கும் அது வழிசமைத்துள்ளது. எனவே, வழிபாட்டுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தனர் என நான் முன்கூட்டியே சுட்டிக்காட்டினேன். அவர்களின் சின்னங்கள் இருக்கலாம். அதற்காக அவை தற்போது பெரும்பாலாக வாழும் சிங்களவர்களுக்குரியன எனக்குறிப்பிட்டு, தமிழர்களின் வழிபாட்டு தலங்களை ஆக்கிரமிக்க முற்படுவது இந்துக்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்- என்றார். (ம-4,44)

## இந்துக்களின் உரிமையை ஒருபோதும் பறிக்கோம்

*அரசு உறுதி*

கொழும்பு, டிசெ. 10

இந்து மக்களின் உரிமைகளை நாம் ஒருபோதும் பறிக்க மாட்டோம். அதேபோன்று நாட்டிலுள்ள தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியது எம் அனைவரதும் கடமையாகும் என்று தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றில் சார்ள்ஸ் எம்.பி. விடுத்த கோரிக்கைக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விவகாரம் தொடர்பில் விளக்கமளிக்க விரும்பவில்லை. ஏனெனில் இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றது.

எனவே, அந்தத் தீர்ப்பு வெளிவரும் வரை பொறுமை காப்போம். நாட்டில் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதத்துக்குரிய தொல்லியல் பெறுமதிமிக்க அடையாளங்கள் உள்ளன. அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும். மாறாக உடைத்து, சேதம் விளைவித்து பிரச்சினையை ஏற்படுத்தக்கூடாது. எனவே, வழக்குத் தீர்ப்பு வெளிவரும் வரை காத்திருந்து நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ம- 4,44)

## குளக்காணிகளை அபகரிக்க முயற்சி

*சந்தேகநபர்கள் ஆறு பேரையும் வெளியேறுமாறு மன்று உத்தரவு*

பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதிக் காணிகளை அத்துமீறி அபகரிக்க முயற்சித்த 6 பேரை, உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று வவுனியா நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.விஸ்ணுதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் குளங்களுக்குச் சொந்தமான காணிகளை அடாத்தாக பிடித்தல் மற்றும் வயற்காணிகளை அடாத்தாக பிடித்து மண்நிரவி வீடுகள் அமைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாக வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரால் 2020ஆம் ஆண்டளவில் வவுனியா பண்டாரிக்குளத்தின் அலைகரை பகுதியில் குளத்துக்குச் சொந்தமான காணிகளை அத்துமீறி பிடித்தமை தொடர்பாக வழக்குகள் தொடரப்பட்டன.

அந்த வழக்குகளில் 6 பேருக்கு எதிரான தீர்ப்பு நீதிமன்றால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் குறித்த 6 நபர்களும் அந்த இடத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று நீதிமன்றால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குளங்களையும், வயல்களையும் பாதுகாக்க வேண்டியது எமது எதிர்கால நீண்டகால தேவை. இதற்காகவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. எனவே எமது மாவட்டத்தில் குளங்களை அடாத்தாபிடித்தவர்களுக்கு எதிராக தொடர்ந்தும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். எபொதுமக்கள் காணிகளைக் கொள்வனவு செய்யும்போதும் வீடுகளை அமைக்கும் போதும் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்வது நன்மை பயக்கும்- என்றார். (ம-4,110)

## பால்மா இறக்குமதி மீண்டும் சிக்கலில்!



கொழும்பு, டிசெ. 10

டொலர் நெருக்கடியை எதிர்கொண்டு பால்மா இறக்குமதி செய்வது மீண்டும் சிக்கலாகியுள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஜனவரி மாதத்தில், இறக்குமதிக்கான கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பால்மா இறக்குமதிக்குத் தேவையான டொலர்களை வழங்குமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை டொலர் நெருக்கடியால், இறக்குமதி செய்யும் பால்மா நிறுவனங்கள் ஏற்கனவே 1 கிலோ பால்மா பக்கெற்றின் விலையை 250 ரூபாவாலும், 400 கிராம் பால்மா பக்கெற்றின் விலையை 100 ரூபாவாலும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)



## டிப்பர் மோதி ஒருவர் காயம்

வவுனியா, டிசெ. 10

டிப்பர் மோதி கிராம அலுவலர் ஒருவர் காயமடைந்தார்.

இந்த விபத்து, வவுனியா மயிலங்குளத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

விபத்தில், ஆசிகுளம் கிராம அலுவலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-ரி1,110)

## டெங்கைக் கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள்!

*மாவட்டச் செயலர் கோரிக்கை*



மன்னார், டிசெ. 10

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வருவதற்கு அனைத்து தரப்பி னரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற டெங்குக் கட்டுப்பாட்டுக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து காணப்படுகிற சூழ்நிலையில், தற்போது டெங்கு நோயும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலையில் நாளை (நேற்று) வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை மன்னார் மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு சகல சமூகமட்ட அமைப்புக்களும் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் - என்றார். (ம-56)

## யுகதனவி நிலையம் தொடர்பில் விளக்கமளிக்க நிதியமைச்சு தயார்

கொழும்பு, டிசெ. 10

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில், நிதியமைச்சு அமைச்சரவைக்கு விளக்கமளிக்கவுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு விளக்கமளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரக் கொள்கலன்களும் வெடித்துச் சிதறுகின்றன

## அநுராதபுரத்தில் முதற்சம்பவம் பதிவு

**கொழும்பு, டிசெ. 10**

**நாடளாவிய ரீதியில் நாளாந்தம் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகிவரும் நிலையில், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயற்கைத் திரவ உரக் கொள்கலன்களும் வெடிக்க ஆரம்பித்துள்ளன.**

அநுராதபுரம் - ஹொரவப்பொத்தானைப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் பதிவாகியது.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைவாக, நாட்டில் பயிர்களுக்கு இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்து, இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதற்காக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திரவ உரம் அடங்கிய கொள்கலன்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. அவை தற்போது வெடிக்கின்றன - என்று ஹொரவப்பொத்தானை பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர்.

சுமார் 200 திரவ உரக் கொள்கலன்கள் எமது விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே சுமார் 100 திரவ உரக் கொள்கலன்கள் வெடித்து வீணாகியுள்ளன - என்று ஹொரவப்பொத்தானை விவசாயிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ம-4)

# எரிவாயு வெடிப்புக்கள் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 10

எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில், அரச நிறுவனங்கள் கவனக்குறைவாகச் செயற்படுகின்றமை தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை தரநிர்ணய சபை, நுகர்வோர் விவகார அதிகார சபை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் பிரதிநிதிகள் விசாரணைகளுக்குத் தேவையான தகவல்களை வழங்கியுள்ளனர்.

இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் உள்ளிட்ட சமூக அமைப்புக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைத்த முறைப்பாடுகளுக்கு அமைவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-4)

# சமையல் எரிவாயு கலவையில் மாற்றம்

## அநுர சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 10

சமையல் எரிவாயு சிலிண்டர்களில் இரசாயனக் கலவையின் அளவில் மாற்றம் செய்யப்பட்டிருந்தமை உறுதியாகியுள்ளது என்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

எரிவாயு சிலிண்டர்களில் இரசாயனக் கலவையின் அளவில் ஏற்பட்ட மாற்றமே சிலிண்டர்கள் தீப்பற்றக் காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் பூதாகரமாகியுள்ள சமையல் எரிவாயு சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, அரசு பொருள்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும், மட்டுப்படுத்தலையும் அறிவித்துள்ளது. ஆனால், அந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் தெளிவில்லாமல் உள்ளது. அது தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

துறைமுகத்தில் அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பெருமளவு கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன. நீண்ட காலம் அவை துறைமுகத்தில் தேங்கிக்கிடப்பதால், பொருள்கள் பழுதடையும் நிலை ஏற்படலாம். அதனால் அவற்றை விடுவிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ம-4-22)

# கஞ்சாவுக்கு அனுமதியா? பொன்சேகா போர்க்கொடி

கொழும்பு, டிசெ. 10

கஞ்சா வளர்ப்புக்கு அனுமதி வழங்கினால், நாளை விபச்சாரத்துக்கும் சட்ட அங்கீகாரம் கோருவார்கள் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.



நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கஞ்சா வளர்ப்புக்கு அனுமதி வழங்கவேண்டும் - என்று சபையில் பெண் எம்.பியொருவர் கோரிக்கை விடுத்துள்ளார். இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இப்படியானவர்கள் நாளை விபச்சாரத்துக்கும் சட்ட அனுமதி கோருவார்கள். பணத்துக்குப் பணிந்து, எமது கலாசாரத்துக்கு எதிரான விடயங்களைச் செய்யக் கூடாது. இன்று விவசாயம் அழிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் இவ்வாறான பொறிக்குள் சிக்க வேண்டாம் - என்றார். (ம-4-44)

# ஒமிக்ரோனுக்கு பூஸ்டர் தடுப்பூசி

கொழும்பு,டிசெ.10

ஒமிக்ரோன் திரிபு வைரஸ் தடுப்பு மருந்துகளுக்கு பதிலளிக்கவில்லை என்றாலும், பூஸ்டர் தடுப்பூசியிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது - என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தத் தகவலை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும், மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார். ஒமிக்ரோன் வகை திரிபு இலங்கையிலும் பிற நாடுகளிலும் வேகமாகப் பரவாது. இந்த வைரஸ் மாறுபாடு பற்றி ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரமுடியவில்லை. இது தொடர்பான தரவுகளைப் படிக்க அதிக நேரம் தேவைப்படுகின்றது - என்றும் அவர் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (ம-4)




**தேன் கூட்டுக்கு கல்லெறிஞ்சால் ஒரு குளவி மட்டும் பறக்காது, கூடவே இருக்கிற ஆயிரத்தெட்டு குளவியும் ஒண்டாப்பறக்கும். அதுமாதிரித்தான் நேற்று பட்சி ஒரு ஆஸ்பத்திரியில நிக்கிற அம்புலன்ஸ் பிரச்சினையைக் கிளப்ப, அந்த ஆஸ்பத்திரி பற்றி ஆயிரத்தெட்டு முறைப்பாடுகள் வந்து குவிஞ்சபடி இருக்கு. குறிப்பா, அந்த ஆஸ்பத்திரியை வேண்டா வெறுப்பாத்தான் நடத்துகினம் எண்டும் கனபேர் சொல்லுகினம்.**

**இப்ப சில்லுக்கழட்டி, கட்டையில ஏறி நிக்கிற அம்புலன்ஸீக்கு கிட்டடியிலதான் 10 லட்சம் ரூபாவுக்கு திருத்தவேலை செய்தவை. இப்பிடிச் சில்லைக் கழட்டிப் போட்டு கராஜீக்குள்ள விடவோ 10 லட்சத்தைக் கொட்டினவை எண்டு சனங்கள் கேக்கினம். அதைவிட இன்னொரு விசயமும் காதுக்குள்ள விழுந்தது. அந்த ஆஸ்பத்திரியின்ர நிர்வாகத்தில இப்ப தலைவரா இருக்கிறவர் அங்க வாறது குறைவாம். மீட்டிங் எண்டா மட்டும் வருவார். அதால ஆஸ்பத்திரிச் செலவுகளுக்கு எழுதுற செக்கில (காசோலையில) கையொப்பம் வாங்க வேணுமெண்டால், அவரின்ர வீட்டதான் போகவேணும். அப்பிடி ஆஸ்பத்திரிக்காரர் போறதுக்கு வாகனம் வேணுமே? அதுக்குத்தான் இருக்கவே இருக்கு அம்புலன்ஸ். அந்த அம்புலன்ஸ் நோயாளியளை ஏத்தி இறக்கினதைவிடவும் இப்ப இருக்கிற தலைவரிட்ட கையெழுத்து வாங்கிறதுக்காக அங்க போய் வந்ததுதான்கூட எண்டும் சொல்லுப்படுது. இப்பிடி என்ன தேவைக்காக அம்புலன்ஸ் இருக்குதோ அதுக்கு பாவிக்காமல் தேவையில்லாததுகளுக்கு பாவிச்சால் சில்லுக் கழட்டுற அளவுக்கு பழுதாப் போகும்தானே?**

**அவ்வளவு ஏன், இன்னொரு சம்பவத்தையும் சொன்னால்தான் இந்த ஆஸ்பத்தியின்ர சமூக அக்கறை விளங்கும். முந்தநாள் இரவுதான் அம்புலன்ஸ் அனுப்பாமல்விட்டு, தலையில கல்லு விழுந்த பிள்ளையை அங்க கொண்டு வந்து, பிறகு அது செத்துப்போச்செண்டு பெரியாஸ்பத்திரியில உறுதி செய்த சம்பவம் நடந்தது. என்ன இருந்தாலும், அந்தக் குழந்தையின்ர சாவு தங்கட அம்புலன்ஸ் இருந்திருந்தால் ஒருவேளை தவிர்க்கப்பட்டிருக்கலாம் எண்ட குற்ற உணர்ச்சி அந்த ஆஸ்பத்திரிக்காரருக்கு அண்டைக்காவது இருந்திருக்கவேணும். ஆனால் நடந்தது வேற. அந்த ஆஸ்பத்திரிக்குள்ள ஒரு முதியோர் பராமரிப்பு நிலையமும் இயங்குது. தங்களைப் பராமரிக்கிறதுக்காக ஒரு பெரிய தொகையைக் கட்டிப்போட்டு வயசான ஆக்கள் சிலர் இங்க தங்கி இருக்கினம். அப்பிடி வயசான ஆக்களைப் பராமரிக்கிறதுக்காக சில பணியாளர்களும் அங்க நிக்கினம். அப்பிடி ஒரு பெண்பராமரிப்பாளருக்கு முந்தநாள் இரவு கடும் காய்ச்சல். அவரால காய்ச்சலைத் தாங்கேலாமல் போக, ஆஸ்பத்திரியிக்கு மருந்தெடுப்பமெண்டு போயிருக்கிறார்.முதியோர் பராமரிப்பு நிலையமும்,ஆஸ்பத்திரியும் ஒரே வளவுக்க தானே. ஆஸ்பத்திரிக் கட்டடத்துக்கு முன்னால போனால் அது பூட்டுப்பட்டுக் கிடந்திருக்கு. கூப்பிட்டுப் பார்த்திருக்கிறார். ம்கூம். ஒருத்தரும் ஓமெண்டேலை. கனநேரம் கூப்பிட்டும் பதில் இல்லாததால அந்தப் பெண் திரும்பி வந்து, பராமரிப்பு நிலையத்துக்கு பொறுப்பா இருக்கிறவாவிடம் தனக்கு காய்ச்சல் எண்டு சொல்லியிருக்கிறா. உடன அவா, ஆஸ்பத்திரியில அண்டைக்கு டியூட்டி பாக்கிற நேர்ஸீக்கு போன் பண்ணி, அவாவை எழுப்பி, கதவைத் திறந்து மருந்து எடுத்திருக்கினம். அதுவும் வெறும் பனடோலைக் குடுத்திட்டு "மாறாட்டி விடிய வாங்கோ" எண்டு அனுப்பியிருக்கினம்.**

**ஒரே வளவுக்க இருக்கிற அந்தப் பணியாளருக்கே இந்த நிலைமை எண்டால், ஆரும் அவசர நோயாளர் போயிருந்தா என்ன நிலைமை? வெறும் பனடோலைத்தான் குடுப்பினம் எண்டால் எல்லாரும் வீட்டில பனடோலை வாங்கி வைச்சிட்டு ஆஸ்பத்திரிப் பக்கமே எட்டியும் பார்க்காமல் இருக்கலாமே? இதுமட்டுமில்லை, இன்னும் நிறைய முறைப்பாடுகள் வந்தபடி இருக்கு. குறிப்பா தேவையில்லாமல் நாப்பது, அம்பது லட்சங்களைக் கொட்டி கட்டின கட்டடங்கள் ஒரு பிரியோசனமும் இல்லாமல் பூட்டி வைச்சிருக்கிற கதையும் காதுக்கு கிட்டியிருக்கு. அதைப் பிறகு தேவைப்பட்டால் வடிவாச் சொல்லுறம்.**

**ஒரு காலத்தில யாழ்ப்பாணத்தில மட்டுமில்ல, இலங்கையிலேயே பேமஸா இருந்த ஒரு ஆஸ்பத்திரி இப்பிடி கண்ணுக்கு முன்னால குட்டிச் சுவரா போறதைப் பார்க்க, அந்தரமாக் கிடக்கு....!**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார்கட்டுக் குளத்தை சீரமைக்கும் பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டுக் குளத்தின் சீரமைப்புப் பணிகள் நேற்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் ஆரம்பிக்கப்பட்டது.



நேற்றுக்காலை நடைபெற்ற இந்த நிகழ்வில் குளத்தின் மாதிரித் திட்ட வரைவு மக்கள் பார்வைக்காக விடப்பட்டது. மாநகர முதல்வர், பிரதி முதல்வர் ஈசன், மாநகர ஆணையாளர் ஜெயசீலன், மாநகரசபை உறுப்பினர்கள் அடிக்கல் நட்டனர். இந்தத் திட்டம் 'மோட்' நிறுவனத்தின் நிறுவுநர் அருந்தவநாதன் அனோசனின் நிதியுதவியுடன்மேற்கொள்ளப்படவுள்ளது -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-20)

## பரீட்சார்த்திகளுக்கே தனியார் வகுப்புக்கள்

2021ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் மட்டுமே தனியார் வகுப்புக்களில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர் -என்று சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகமான மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளன. தொற்று நோயால் கீழ் நிலை வகுப்புக்களில் உள்ளவர்கள் தனியார் வகுப்புகளில் கலந்து கொள்ள அனுமதிக்க முடியாது. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைத் திகதிகள் நெருங்கி வருவதால், சுகாதார வழிகாட்டல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றி, தனியார் வகுப்புக்களை நடத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



## மீண்டும் பேருந்துத் தரிப்பிடம்

முல்லைத்தீவு, டிசெ. 10

முல்லைத்தீவு- முத்தையன்கட்டு இடதுகரையில் கடையாக மாற்றப்பட்டிருந்த பேருந்துத் தரிப்பிடம், மீண்டும் பேருந்துத் தரிப்பிடமாக மாற்றப்பட்டது.

1987ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குறித்த பேருந்துத் தரிப்பிடம் அண்மையில் தனிநபர் ஒருவரின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு சிறு கடையாக மாற்றப்பட்டது. புதுக்குடியிருப்பு பிரதேசசபை இதனை மேற்கொண்டிருந்தது.

இதற்குப் பொதுஅமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, புதுக்குடியிருப்பு பிரதேசசபை மீண்டும் பேருந்துத் தரிப்பிடத்தை அமைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. (ம-4-13)

## பிளாஸ்ரிக் பொருள்களை தடைசெய்ய நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 10

பிளாஸ்ரிக் மாலைகள் மற்றும் இடியப்பத் தட்டுகள் உட்பட 8 பொருள்களைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.


சுற்றாடல் அமைச்சு உட்பட பல அமைச்சுக்களின் செலவின தலையீடுகள் மீதான வரவு -செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருடாந்தம் கதிர்காமத்துக்கு சுமார் 3 லட்சம் பக்தர்கள் வருகை தருகின்றனர். சுமார் 2 ஆயிரம் கிலோ பொலித்தீன் மாலைகளை எடுத்துச் செல்கின்றனர். இந்த மாலைகளை அவர்கள் தரையில் வீசுகின்றனர். அல்லது மாணிக்க கங்கையில் வீசுகின்றனர்.

பிளாஸ்ரிக் மாலைகள் தடைசெய்யப்பட்டதன் பின்னர், இயற்கை அல்லது எண்ணெய்க் காகிதத் தாள்களைக் கொண்ட மலர்களை மாலைகளாக தயாரிக்க உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுவர்.

பிளாஸ்ரிக்குக்குப் பதிலாக இயற்கை மூலப்பொருள்களிலிருந்து இடியப்பத் தட்டுகளை உற்பத்தி செய்வதை அரசு ஊக்குவித்து வருகின்றது. இந்தத் தயாரிப்பை பிரபலப்படுத்துவதற்கான திட்டங்களை அமைச்சின் அதிகாரிகள் ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளனர். ஷொப்பிங் பைகளுக்கு தடை விதிக்கப்படும். அதற்குப் பதிலாக உக்கக்கூடிய பை அறிமுகப்படுத்தப்படும் - என்றார். (ம-4)



## வீதி விளக்குகள் பொருத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 10

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வீதி மின்விளக்குகள் பொருத்தப்படுகின்றன.

இதில் முதற்கட்டமாக பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ்க்கென ஒதுக்கப்பட்ட நிதியில் கொடிகாமம் மத்தியிலுள்ள முக்கிய பகுதிகளுக்கு வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டன.

அடுத்த கட்டமாக மேலும் சில முக்கிய பகுதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-159)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 10

கலாநிதி இரத்தினம் நித்தியானந்தனின் 'குடில் கொண்ட தலைமை ஆசான்' நூல் வெளியீடு எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு சூம் செயலி ஊடாக நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சூம் செயலி இலக்கம் 9787933075 - கடவுச் சொல் nithy1 ஊடாக இணைந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## காலபோக பயிர்ச்செய்கை வெள்ளத்தால் அழிவு

*விவசாயிகள் கவலை*

தென்மராட்சி தெற்கு, கோயிலாக்கண்டிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோகப் பயிர்ச்செய்கை அழிவடைந்து நஷ்டம் ஏற்பட்டது என நெற்செய்கையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

குறைந்தது 125 பரப்புக்கு மேற்பட்ட வயல்களில் விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்தன என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-159)

## மன்னாரில் புதன்கிழமை 8 பேருக்கு கொரோனா!

மன்னார், நவ. 10

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த எட்டுப் பேருடன் சேர்த்து இந்த மாதம் மன்னாரில் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை 126ஆக உயர்ந்துள்ளது. (ம-60)

## நினைவேந்தல் நிகழ்வு

பேராசிரியர் க.கைலாசபதியின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகத்தின் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், தொடக்கவுரையை ஆசிரியர் த.ஸ்ரீபிரகாஸ், நிறைவுரையை தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான க.தணிகாசலம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள நிகழ்வில், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவை தெரிவித்துள்ளது. (மரி)

## மாதவிடாய் தினத்தில் விழிப்புணர்வு நிகழ்வு




முல்லைத்தீவு மாவட்டத்தில் முதற் தடவையாக மாதவிடாய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. புதுக்குடியிருப்பு பெண்கள் தொழில் முயற்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது. விமுது ஆற்றல் பேரவையின் ஏற்பாட்டில் மாதவிடாயை பேசுபொருளாக்கும் கவிதைகள், விழிப்புணர்வுப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டன. (ம-4-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## தரமற்ற எரிவாயு இறக்குமதி விசாரணை கோரி ரிட் மனு!

கொழும்பு, டிசெ. 10
சரியான தர நிலைகள் இல்லாமல் எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டமையால் ஏற்படும் அபாயகரமான சம்பவங்கள் தொடர்பில், விசாரணை நடத்த பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட வேண்டும் என்றுகோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர்களான பந்துல குணவர்தன, லசந்த அழகியவன்ன மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர், இலங்கை தர நிர்ணய சபையின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு எதிராகவே இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயு நிறுவனங்களின் அனைத்துச் சொத்துக்களையும் இடைநிறுத்த இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்குமாறும் மனுவில் குறிப்பி டப்பட்டுள்ளது. சிவில் சமூக ஆர்வலர் நாகாநந்த கொடித்துவக்கு இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (ம-4)

# தடைகள் இன்றி மின் விநியோகம்

## அமைச்சர் உறுதியளிப்பு



கொழும்பு, டிசெ. 10
**நாட்டில் மின்சாரப் பிரச்சினை தற்போது வழமைக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. நாடு முழுவதும் மின்விநியோகம் வழமைபோன்று இடம்பெறுகின்றது என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனாதிபதி இந்த விடயத்தில் தலையிட்டு மின்சார சபை தொழிற்சங்கத்தினருடன் கலந்துரையாடியதால், எவ்வித பிரச்சினையும் இன்றி தடையின்றி மின்சாரம் விநியோகிக்கப் படுகின்றது. கொரோனா சவால் மற்றும் எதிர்க் கட்சி திட்டமிட்டு ஏற்படுத்தும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுத்து, மக்களுக்காக முன்னெடுக்க வேண்டிய சகல அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் மேற்கொள்கின்றோம். தொடர்ந்து நாட்டு மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் தொழில் முயற்சியாளர்களை கட்டியெழுப்ப பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியுள்ளோம். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள மக்களை சக்திமிக்க சுய தொழில் முயற்சியாளர்களாக மாற்றுவதையே எதிர்பார்க்கிறோம். ராஜபக்சக்களுக்கு இந்த நாட்டைக் கட்டியெழுப்பு பலம் உள்ளது. நாட்டைப் பாதுகாத்த தலைவர்கள் என்ற அடிப்படையில் ராஜபக்சர்கள் மக்களுக்காகச் செயற்படுகின்றனர். என்றார். (ம-4)

## முகக்கவசம் அணியாதோரை கண்காணிக்க 785 பொலிஸார்

கொழும்பு,டிசெ.10
பொது மக்கள் சரியான முறையில் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுகிறார்களா என்பதைக் கண்டறியவும், சுகாதார விதிகளை மீறுபவர்களைக் கண்டறியும் வகையிலும் 785 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-4)

## பாகிஸ்தானில் கண்டன தினம்

கொழும்பு, டிசெ. 10
பாகிஸ்தானின் சியால் கோட்டில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவை நினைவு கூர்ந்தும், அவரது கொலையைக் கண்டித்தும், பாகிஸ்தானில் இன்று வெள்ளிக் கிழமை விசேட கண்டன தினம் அறிவிக்கப் பட்டுள்ளது.

சியால்கோட்டில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் மேலாளராக பணி புரிந்த பிரியந்த, ஏனைய ஊழியர்களால் சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டு எரியூட்டிக் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

## தரமற்ற உரக்கப்பல் இலங்கையில் இல்லை

கொழும்பு, டிசெ. 10
சீனாவில் இருந்து தரமற்ற உரத்தை ஏற்றிவந்த சரக்குக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் இருந்து வெளியேறியுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அறிவித்துள்ளார்.

சேதன உரத்தை இறக்குமதி செய்வதற்கு எதிரான ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டத்தரணி ஊடாக நீதிமன்றுக்கு அமைச்சர் இதனை அறிவித்தார். (ம-4)

## பொறுப்பை நிறைவேற்றுக



கொழும்பு, டிசெ. 10
நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி, உரம், எரிவாயு மற்றும் பொருள்களின் விலைகள் தொடர்பில் ஒருவரை யொருவர் குற்றஞ் சாட்டாமல், அரசு தனது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த நாட்டின் அரசியல்வாதிகள் மத்தியில் நேர்மையான, ஊழலற்ற, மோசடியற்ற, தேசப்பற்றுள்ளவர்களை ஒன்றிணைத்து பரந்த பலமான சக்தியொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-4)

## வழமைக்குத் திரும்பும் வரை 1 மணிநேரம் மின்வெட்டு

கொழும்பு, டிசெ. 10
நுரைச்சோலை அனல்மின் நிலையம் வழமைக்குத் திரும்பும் வரை நாட்டின் பல பகுதிகளில் குறைந்தது ஒரு மணிநேரம் மின்சாரம் தடைப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, கடந்த 3ஆம் திகதி நாடு முழுவதும் மின்தடை ஏற்பட்டது. மின் உற்பத்தி நிலையத்தின் முழு கொள்ளளவையும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க குறைந்தது 3 நாள்கள் ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)



## இலங்கைக்கு எதிராக சீன நிறுவனம் வழக்கு

கொழும்பு,டிசெ.10
சீனாவில் இருந்து சேதனப் பசளையை இலங்கைக்கு ஏற்றுமதி செய்த சின்டாவே சீவின் பயோடெக் நிறுவனம், இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளது. சேதனப் பசளை தொகையில் பாதிப்பை ஏற்படுத்தும் நுண்ணுயிர்கள் இருந்ததாக கூறி, இலங்கை பசளையை நிராகரித்தது.

குறித்த கப்பல் தற்போது சிங்கப்பூரை நோக்கிப் பயணித்துள்ளது. குறித்த கப்பல் சிங்கப்பூரைச் சென்றடைந்ததும் வழக்குத் தொடர சீன நிறுவனம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச சமரச நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடரப்படவுள்ளது. (ம-4)

# இந்தியா, இலங்கையிடையே நான்கு அம்சப் புரிந்துணர்வு!



புதுடில்லி, டிசெ.10
இலங்கையின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியாவுக்கு அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட நிலையில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நான்கு அம்ச புரிந்துணர்வு எட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு உணவு, மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதை ஈடுசெய்யும் முகமாக, கடன் வரி நிவாரணம் கருத்தில் கொண்டு அவசர அடிப்படையில் உணவு மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் தொகுப்பை வழங்குதல்.

இந்தியாவில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான கடன் வரி மற்றும் திருகோணமலை தொட் டிப் பண்ணையின் ஆரம்பகால நவீனமயமாக்கல் ஆகியவற்றை உள்ளடக்கிய சக்திப் பாதுகாப்புத் தொகுப்பை வழங்குதல். இலங்கைக்கு உதவுவதற்காக நாணயப் பரிமாற்றத்தின் சலுகையை வழங்குதல். வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பை விரிவுபடுத்துவதற்கப் பங்களிக்கின்ற இலங்கையில் உள்ள பல்வேறு துறைகளில் இந்திய முதலீடுகளை எளிதாக்குதல் ஆகிய விடயங்களில் விரைவில் மேற்படி இருதரப்புப் புரிந்துணர்வு எட்டப்பட்டுள்ளது. (ம)



## எச்சில் துப்பினால் சட்டம் பாயும்!

கொழும்பு, டிசெ. 10
நெடுஞ்சாலைகளில் எச்சில் துப்புபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் பாதுகாப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் தொற்றுநோய் நிலைமையைக் கருத்தில் கொண்டு இதனைக் கடுமையாக அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியைத் தாக்கிய கணவனுக்குப் பிணை

கொழும்பு, டிசெ. 10

தனது மனைவியைக் கூரிய ஆயுதங்களால் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கணவன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இராஜாங்கனையைச் சேர்ந்த சந்தேக நபர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நிலையில், தலைமறைவாகி இருந்துள்ளார். அவரது மனைவி வேறு ஒருவருடன் தொடர்பு வைத்துள்ளார் என்பதைக்கேள்வியுற்று, வீட்டுக்கு அருகில் மறைந்திருந்து இருவரையும் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

சந்தேகநபர் இராஜாங்கனை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில், மேலதிக விசாரணைகளுக்காக நொச்சியாகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர். சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார். இந்த நிலையில் சந்தேகநபரை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு தம்புத்தேகம நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-4)

# பாடசாலைகளில் புதிய கொத்தணி

*மீண்டும் மூடப்படலாமென எச்சரிக்கை*



**கொழும்பு, டிசெ. 10**

**சில பாடசாலைகளில் கொரோனாக் கொத்தணிகள் உருவாக ஆரம்பித்துள்ளதால், மீண்டும் பாடசாலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்படலாம் -என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைக் கட்டமைப்புக்குள் நிர்வாகப் பிரிவினர் மற்றும் மாணவர்கள் மத்தியில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

இதனால் சில இடங்களில் கொத்தணிகளும் பதிவாகிய வண்ணமுள்ளன. இவ்வாறு அதிகரித்துவரும் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டிய முழுப் பொறுப்பும் பாடசாலை நிர்வாகப் பிரிவினருடையதாகும். அதேபோன்று மாணவர்களும், பெற்றோரும் சுகாதார விதிமுறைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்ற வேண்டும். அவ்வாறில்லை எனில் மீண்டும் பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் என்பதை சகலரும் நினைவில் கொள்ள வேண்டும் -என்றார். (ம-4)

# சிறுமிகள் ஐவர் தப்பியோட்டம்

கொழும்பு, டிசெ.10

சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு நிலையத்தில் இருந்த 5 சிறுமிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தேகம- மீகம்மன பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்று வரும் இவர்கள் கடந்த 6 ஆம் திகதி காலை பாடசாலைக்குச் சென்று, மீண்டும் பராமரிப்பு நிலையத்துக்குத் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தப்பிச்சென்ற சிறுமிகள் நாவலப்பிட்டி, தவுலகல, புஸல்லாவை, உடிஸ்பத்துவ மற்றும் வத்தேகமப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் தவுலகல பிரதேசத்திலிருந்து சிறுமியொருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

ஏனையோரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)

# பல்கலை அனுமதிக்கான தகுதிப் பரீட்சை நிறுத்தம்

கொழும்பு, டிசெ. 10

எதிர்காலத்தில் பல்கலைக் கழக அனுமதிக்கான தகுதிப் பரீட்சைகளை நிறுத்துவதற்குத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (ம-4)

# கொரோனாவால் பெற்றோரை இழந்த மாணவர்களின் கற்றலுக்கு நிதியுதவி

கொழும்பு, டிசெ. 10

கொரோனாத் தொற்றால் பெற்றோரை இழந்த 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கான திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் இடுகம கொரோனா சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியின் கீழ் செயல்படுத்தப்படும்.

தாய் அல்லது தந்தையின் இறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல், மாணவரின் பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல், இறப்பு நிகழ்ந்த கிராம அலுவலர் பிரிவு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் மாணவர் படிக்கும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதம் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை செயலாளர், கொரோனா சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம், ஜனாதிபதி செயலகம், கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# போலந்து– இலங்கை நேரடி விமானச் சேவை

கொழும்பு, டிசெ. 10

போலந்து மற்றும் இலங்கைக்கு இடையிலான நேரடி விமானச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக போலந்தின் ஓர்சோ நகரத்தின் செப்பின் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து முதலாவது விமானம் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தது.

இந்த விமானச் சேவை வாரத்தில் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# ஒமிக்ரோனில் மட்டும் 32 புதிய பிறழ்வுகள்

கொழும்பு, டிசெ. 10

ஒமிக்ரோன் திரிபில்மட்டும், 32 பிறழ்வுகள் இதுவரையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளன -என்று கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் தொடர்பான நிபுணர் மருத்துவர் ஜூட் ஜயமஹா உறுதிப்படுத்தியுள்ளார். அடையாளம் காணப்பட்டுள்ள திரிபின் எட்டுப் பிறழ்வுகள் றம்புட்டான் பழத் தோற்றத்தைக் கொண்டவை. அவை டெல்டா பிறழ்வு பரவுவதைவிடவும் வேகமாகப் பரவும். அத்துடன் டெல்டா மற்றும் அல்பா திரிபுகளின் பிறழ்வுகளைவிடவும் இதன் பிறழ்வுகள் அதிகம் என்றும் அவர் தெரிவித்தார். (ம-4)

# 10 இலட்சம் பேருக்கு பூஸ்டர் தடுப்பூசிகள்



கொரோனா பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தைக் கடந்துள்ளது -என்று தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது. நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இலங்கையில் பூஸ்டர் தடுப்பூசிகளை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2ஆவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் 3 மாதங்களைக் கடந்த நபர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. (ம-4)

# கடற்படையினர் 1,768 பேருக்கு பதவியுயர்வுகள்

கொழும்பு, டிசெ. 10

இலங்கைக் கடற்படையின் 71ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, 84 கடற்படை அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவி நிலையிலுள்ள ஆயிரத்து 684 பேர் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவின் பரிந்துரையின் பேரில் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-4)

# இலங்கையில் 128 பெண்கள் கணவர்மாரால் கொலை

கொழும்பு, டிசெ. 10

இலங்கையில் கணவன்மாரால் 128 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியம் மேற்கொண்ட ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 243 பெண்கள் கொலை செய்யப்பட்டனர். குறித்த காலப்பகுதியில் இயற்கைக்கு மாறான 243 மரணங்களில், 62 வீதமானவை பெண்களின் சட்டபூர்வ கணவர் அல்லது முன்னாள் கணவர் அல்லது குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதே வேளை, 69 வீதமானவை பதிவு செய்யப்படவில்லை என்றும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நுண்மியும் நுண்நிதியும்!

ஒட்டுமொத்த இலங்கையையும் கடந்த இரண்டு ஆண்டுகளாக முடக்கிப் போட்டுள்ள நுண்மி பற்றி (கொரோனா நுண்கிருமி) அலட்டிக்கொள்ளும் அளவுக்கு நுண்நிதியால் ஏற்படும் வதைபாடுகள் தொடர்பில் நாம் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. இதன் விளைவாக, ஐக்கிய நாடுகள் சபை கடந்த சில ஆண்டுகளில் சுமார் 200 பெண்கள் இந்த நுண்நிதிக் கடன்களால் தம் உயிரை மாய்த்துள்ளனர் என்று அறிக்கையிட்டுள்ளது.

நுண்நிதிக் கடன்களை வழங்குவது தொடர்பிலும் அவற்றைத் திரும்பப் பெறுவது தொடர்பிலும் இதுகாலும் எந்தக்காத்திரமான பொறிமுறையும் இலங்கை அரசால் வகுக்கப்படவில்லை. 30 ஆண்டுகாலப் போர் காரணமாக இலங்கையில் ஏராளமான குடும்பங்கள் குறிப்பாக பெண் தலைமைக் குடும்பங்கள் வறுமைக்கோட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ள பெண் தலைமைக் குடும்பங்களில் பெரும்பாலான குடும்பங்கள் வடக்கு – கிழக்கைச் சார்ந்தவை. இவ்வாறு வறுமையின்பிடியிலுள்ள குடும்பங்களைத்தான் மேலும்மேலும் இலக்குவைத்து இரையாக்கிச் சாகடிக்கின்றன இந்த நுண்நிதி நிறுவனங்கள்.

வாழ்வாதாரத்துக்கான எந்தப் படர்கொம்பும் அற்ற இந்தப் பெண் தலைமைக் குடும்பங்கள் தாம் பற்றிப் பிடிக்க ஏதேனும் ஒரு பிடிமானம் தேவையென்ற நிலையில், அந்தக் குடும்பங்களில் அநேகமானவற்றின் ஒரே தெரிவாக இந்த நுண்நிதி நிறுவனங்கள் அமைந்துவிடுகின்றன. நிறுவனங்களும் அந்தக் குடும்பங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றன. தாம் கடன் கொடுக்கும் குடும்பங்கள் அந்தக் கடனைத் திரும்பச் செலுத்தக்கூடிய இயலுமையில் உள்ளனவா? என்ற குறைந்தபட்ச எண்ணம்கூட மேற்படி நுண்நிதி நிறுவனங்களுக்கு இருப்பதில்லை. பின்னர், அந்தக் கடன்களுக்கான வட்டிகள் அதற்குரிய வட்டிகள் என்று அனைத்தும் சேர்த்து ''குருவியின் தலையில் பனங்காயாக'' அந்தக் குடும்பங்களை நெருக்கும் போது மூச்சை நிறுத்துவதே முடிவாக அமைந்துவிடுகின்றது.

அதிலும் கொரோனாப் பெருந்தொற்றுக் காலமான இக்காலத்தில் நுண்மியும் நுண்நிதியும் இணைந்து, அந்தக் குடும்பங்களை இரட்டிப்பாக வதைக்கின்றன. பணத்தை ஈட்டுவதற்கும் பெருக்குவதற்குமுரிய சாத்தியப்பாடுகள் இல்லாதநிலையில், எவ்வாறு குறித்த பயனர்கள் (கடன்காரர்கள்) கடன்களைத் திரும்பச் செலுத்துவார்கள் என்ற குறைந்தபட்சப் புரிதல்கூட இல்லாதநிலையில், கடன்களைத் திரும்பக்கேட்டு குறித்த நிறுவனங்களால் பெண் தலைமைக் குடும்பங்கள் பலவும் வதைக்கப்படுவது உலகறிந்த கதை.

கொரோனாவால் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வங்கிகளும் நுண்நிதி நிறுவனங்களும் பயனாளர்களுக்கு அவகாசங்கள் வழங்க வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ள போதிலும், அந்த அறிவுறுத்தல் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளதா என்று கேட்டால் பதில் 'இல்லை' என்பதே. அரசின் அறிவுறுத்தல்களை மீறி, கடன்கள் அரச வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களால் வலிந்து வசூலிக்கப்படுகின்றபோதிலும், அவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக இதுவரை அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கேட்டால் அந்தக் கேள்விக்கும் பதில் இல்லை.

இந்தப் பொருளாதார முடக்கநிலை நீட்சிபெறும் பட்சத்தில், இன்று 200ஆக இருக்கும் இந்தச் சாவுகளின் எண்ணிக்கை இனிவரும் காலங்களில் இருமடங்காகவோ மும்மை பெறவோ வாய்ப்புக்கள் மிகஅதிகம். உரிய திட்டங்கள் இப்போதாவது வகுக்கப்படாவிட்டால் இதுபோன்ற 'சர்வதேசத் தலைகுனிவு' இலங்கைக்குத் தொடர்கதையே!



வடக்கு-கிழக்கில்

# நெசவுத் தொழிலை மேம்படுத்தத் திட்டம்



**கொழும்பு, டிசெ. 10**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெசவுக் கைத்தொழிற்துறையை முன்னேற்றுவதற்கான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

வர்த்தக அமைச்சு, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களின் வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூடப்பட்டுள்ள நெசவுக் கைத்தொழில் நிலையங்களைத் திறப்பதற்கும், அவற்றுக்கான உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் வடக்கில் பயிற்சி நிலையங்களை உருவாக்கவும், தற்போது இயங்கும் பயிற்சி நிலையங்களை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுக்காக 45 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. வடக்கில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அங்கு விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதேவேளை, பாகிஸ்தானில் இலங்கைப் பொறியியலாளர் படுகொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கின்றேன் - என்றார். (ம-4)

## டொலர் தட்டுப்பாடு: விரைவில் தீர்வு கிட்டும்

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் - என்று மத்திய வங்கியின் ஆளுநரான அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

மக்களுக்குத் தட்டுப்பாடு இன்றி பொருள்களை வழங்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்தியாவசியப் பொருள்களுக்கு தற்போது தட்டுப்பாடு இல்லை. எண்ணெய்த் தட்டுப்பாடும் இல்லை. போதுமான அளவு கையிருப்புஉள்ளது. பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம் மத்திய வங்கி தலையிடும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## 75 கால்நடைகள் பிரதேச சபையிடம்



முல்லைத்தீவு, டிசெ.10

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி வீதிகளில் கட்டாக்காலிகளாக நடமாடிய 75 கால்நடைகள் பிரதேச சபையினரால் பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை 75 மாடுகள் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிடிக்கப்பட்டுள்ள கால்நடைகளின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது. பெரிய மாடு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவும், சிறிய மாடு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாவும், ஒருநாள் பராமரிப்புக்கு இருநூறு ரூபாவும் தண்டப்பணமாக அறவிடப்படும் - என்று பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-4-19)

**நாளை**

**11.11.2021**
சனிக்கிழமை
கார்த்திகை 25

சுபநேரம் : 03.19 – 04.49
ராகுகாலம்: 09.19 – 10.49
திருவெம்பாவை ஆரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 10.11.2021 புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் திரு. பாலசிங்கம் தங்கவேல்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வானது இன்று (10.12.2021) வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து இல.345, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த சகல உள்நாட்டு, வெளிநாட்டு, உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்களது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CS 41525) (3/6)

539, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 9175
077 760 0444

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் 2021ஆம் ஆண்டுக்கான நத்தார் இன்னிசை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் தென்னிந்திய திருச்சபையின் பேராயரின் காரியாலயத்தில் கல்லூரியின் அதிபர் சொலமன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கல்லூரியின் ஆசிரியர்களால் நத்தார் இன்னிசை கீதங்கள் இசைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர்,உப அதி பர்கள்,மாணவர்கள்,தென்னிந்திய திருச்சபையின் குருமார் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ய-125)





சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கல்விகற்கும் பொருண்மியம் நலிவடைந்த மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.
குறித்த நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.
கனடா நாட்டில் இருந்து வருகைதந்த பழைய மாணவியால் பொருளாதாரத்தில் பின்தங்கிய 15 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ய-159)





யாழ். மாவட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்தங்கிய அடிப்படை வசதிகள் குறைவான சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலைக்கு ரட்ணம் பவுண்டேசன் பிரித்தானியா மற்றும் வன்னிஹோப் அவுஸ்திரேலியா ஆகிய நிறுவனங்களின் நிதிப் பங்களிப்பில் கணினிகள் வழங்கிவைக்கப்பட்டன. இந்த நிகழ்வுக்கு வலிகாம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞானலிங்கம் ஆதவன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் நாகராஜா அம்பிகைபாகன், வன்னி ஹோப் மற்றும் யு.எஸ்.டி.எப். நிறுவனங்களின் உத்தியோ கத்தர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் கலந்துகொண்டனர். (ய)





முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு 11 குருதி அழுத்தக் கண்காணிப்பு இயந்திரங்கள் இரண்டு கட்டங்களாக கடந்த திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப கலை கலாசாரம் மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமையத்தின் செயலாளர் ஆசிரியர் லயன் சு.சுபநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மா.விஜயகுலசிங்கம் அமையத்தின் காப்பாளரின் நிதி ஒழுங்கமைப்பில் குடும்பநல உத்தியோகத்தர்களின் பணிக்காக 9 இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன. அத்தோடு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு சேவைக்காக ஒன்றும் மல்லாவி மருத்துவ அதிகாரி பணிமனைக்கு ஒன்றும் என மல்லாவி பிரதேசத்தில் சிறந்த மருத்துவ சேவைக்காக இந்த 11 இயந்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ய-19)

உரும்பிராய் செல்லப்பா சனசமூக நிலை யத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட் டின்கீழ் 80 சென்ரிமீற்றர் நவீன தொலைக் காட்சி,இறுவட்டு இயக்கி மற்றும் நீர்த் தாங்கி ஆகியன வழங்கி வைக்கப்பட்டன. (ய-319)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாண முன்னணி ஆசிரியர்களின் கைவண்ணத்தில் வெளிவரும் புலமைசார் வழிகாட்டி கையேடு

உதயன் இன்

# புலமைச்சுடர்

தரங்கள் 5 4 3 2



- குறித்த தரங்களுக்குரிய கணிதம், தமிழ், சுற்றாடல் ஆகிய பாடங்களுக்குரிய அலகுப் பயிற்சிப் பரீட்சைகள் விடைகளுடன்.
- அரச புலமைப் பரிசிலை வெற்றிக்கொள்ள உதவும் இரண்டு மாதிரி வினாத்தாள் தொகுதிகள் - விடைகளுடன்.
- பொது அறிவு- நுண்ணறிவு வினாக்கள்

2021 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான எமது இவ்வருடத்துக்கான இறுதிக் கையேடு (புலமை- 7 - 2021)

முன்னணி வளவாளர்களின் எதிர் பார்க்கை வினாக்களடங்கிய வினாத் தாள் தொகுதிகள் 5 உடன் விரைவில் வெளிவர வுள்ளது. பதிவுகளை முற்கூட்டியே மேற் கொள்ள தகவலை உங்களுக்கு தருகின்றோம்.

குறித்த வெளியீடுகளை தற்போது எமது முகவர்களிடமும் முன்னணி புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு

021 492 7411, 077 6569 617



ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் வீர வணக்கம் செலுத்துவதற்காக மெட்ராஸ் ரெஜிமென்ட் சென்டர் ஸ்ரீ நாகேஷ் பேரக்ஸ் சதுக்கத்தில், வைக்கப்பட்டுள்ளன. உயிரிழந்த 13 பேரின் உடல்கள் தேசியக்கொடி போர்த்தி, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இராணுவ ட்ரக்குகளில் சதுக் கத்துக்குக் கொண்டுவரப்பட்டன. உயிரிழந்த இராணுவ முப்படைத் தளபதி உள்ளிட்டோரின் உடலுக்கு முதல்வர், முப்படைகளின் தளபதிகள், இராணுவ அதிகாரிகள் மலர் வளையம்வைத்து அஞ்சலி செலுத்தினர். (ச)

# உயிரிழந்தவர்களுக்கு தலைவர்கள் அஞ்சலி

புதுடில்லி, டிசெ.10

பிபின் ராவத் உள்ளிட்ட 13 பேர் மறைவுக்கு பிரதமர் மோடி, மத்திய மந்திரிகள் ராஜ்நாத் சிங், அமித்ஷா உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் உள் ளிட்ட 14 பேர் பயணம் செய்த இராணுவ ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்தனர். நாட் டையே உலுக்கிய இந்தத் துயரச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் அதிர்ச்சியும் வேதனையும் தெரி வித்து வருகின்றனர்.

தலைமைத் தளபதி பிபின் ராவத் உள்ளிட்ட 13 பேர் மறை வுக்கு பிரதமர் மோடி, பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங், உள்துறை மந்திரி அமித் ஷா உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். (ச)

# பிபின் ராவத் மறைவுக்கு பாகிஸ்தான் இரங்கல்

புதுடில்லி, டிசெ.10

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே காட்டேரி பகுதி யில் சென்றபோது இராணுவ ஹெலிகொப்டர் விபத் துக்குள்ளானதில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், இந்திய இராணுவத்தின் முப்படை களின் தலைமைத் தளபதி பிபின் ராவத் ஹெலி கொப்டர் விபத்தில் உயிரிழந்த சம்பவத்துக்கு பாகிஸ் தான் இராணுவம் இரங்கல் தெரிவித்துள்ளது. (ச)

# விபத்துக்குள்ளான ஹெலியின் கறுப்புப்பெட்டி கண்டுபிடிப்பு

புதுடில்லி, டிசெ.10

குன்னூரில் முப்படைகளின் தளபதி பிபின் ராவத் உள்ளிட்ட 14 பேர் பயணித்த ஹெலிகொப்டர் விபத்தில் 13 பேர் உடல் கருகி உயிரிழந்தனர் என இந்திய விமானப்படை தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டது.

ஹெலிகொப்டரில் உள்ள கறுப்புப் பெட்டியில் விபத் துக்கு முன் கடைசி நிமிடத்தில் பைலட் பேசியது பதி வாகி உள்ளது.

மேலும் எவ்வளவு அடி உயரத்தில் பறந்தது என்பன உள்ளிட்ட விவரங்களும் பதிவாகி உள்ளன.

கண்டெடுக்கப்பட்ட கறுப்புப் பெட்டி குறித்து விசா ரணை நடத்தப்பட்டு வருகிறது எனத் தகவல் வெளி யாகியுள்ளது. (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நெருங்கிய உறவினர்களை இன்று சந்தித்து மகிழ்ச்சி அடைவீர் கள். பெரியவர்களின் ஆசி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். உங்களின் மனம் குளிரும்.

**இடபம்:** மனநிறைவு தரும் செயல் களைச் செய்து திருப்தி அடைவீர்கள். வாழ்க்கைத் துணைவரால் மிகுந்த நலம் உண்டாகும். வீண் வாக்குவாதங் களைத் தவிர்த்தால் நன்மை உண்டு.

**மிதுனம்:** பணியிடத்தில் சக ஊழி யர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங் கும். சாதுர்யமாகச் செயற்பட்டு முயற்சி களில் வெற்றி பெறுவீர்கள். உழைப்புக் கேற்ற பலன் கிடைக்கும்.

**கடகம்:** உங்களின் பேச்சு, செயல் களில் அதிக கவனம் தேவை. சகோ தர சகோதரிகளுக்குள் ஒற்றுமையும் நன்மையும் ஏற்படும். நண்பர்களிடம் இருந்து உங்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்:** நட்பு வட்டம் விரிவடைந்தாலும் அதுபற்றி கவனமாயிருங்கள். தந் தைக்கு இருந்து வந்த நோய் அகலும். மாணவர்கள் மகிழ்வர். பணி பற்றிய முயற்சி ஒன்று நல்ல பலன் தரும். நேர விரயம் ஏற்படும்.

**கன்னி:** உங்களின் பேச்சு, செயல்க ளில் அதிக கவனம் தேவை. சகோ தர சகோதரிகளுக்குள் ஒற்றுமையும் நன்மையும் ஏற்படும். உங்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

**துலாம்:** புதுமை படைப்பீர்கள். நட்பு விடயத்தில் கவனமாக இருக்கவும். சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனத் தாங்கல்கள் நீங்கும். உடன்பிறந்த வர்களால் நன்மையும், இலாபமும் உண்டாகும்.

**விருச்சிகம்:** பங்குச்சந்தை, கமிஷன் போன்ற வகைகளில் பணம் வரும். மனத்துக்கு இனிய சம்பவங்கள் நிக ழும். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்ப்பு கள் விலகும். பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள்.

**தனுசு:** உங்களுக்குத் தொல்லை கொடுத்தவர்கள் விலகுவார்கள். நிதான நன்மை உண்டு. உங்களின் புதிய முயற்சிகளுக்கு மேலதிகாரியின் ஆத ரவு இருக்கும்.

**மகரம்:** உங்களின் எதிர்காலம் சம் பந்தமான எண்ணம் ஒன்று நிறை வேறும். உங்களது பேச்சினால் ஏற்பட்ட பிரச்சினைகள் இன்று தீரும். பணியிடத்தில் உங்களுக்கு பெருமை தரும் நிகழ்ச்சி ஒன்று நடைபெறும்.

**கும்பம்:** உங்களின் குழந்தைகள் மேடை ஏறிக் கைதட்டல் வாங்குவார்கள். குடும் பத்தில் யாருக்கேனும் ஒருவருக்கு சுபநிகழ்ச்சி நடைபெறும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். உறவுகளில் இருந்த மனக்கசப்புகள் மாறும்.

**மீனம்:** நெருங்கிய உறவினர்களுடன் வாக்கு வாதம் செய்ய வேண்டாம். பணியிடத்தில் பெரிய பொறுப்புக் களை நிறைவேற்றி வெல்வீர்கள். நண்பர் ஒருவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபையின் பட்ஜெட் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும்!

## முதல்வர் மணிவண்ணன் நம்பிக்கை



**யாழ்ப்பாணம், டிசெ.10**

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் சபை உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

வரவு-செலவுத் திட்ட தயாரிப்பின்போது அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்துபேசி, அவர்களின் கோரிக்கைகளை உள்ளடக்கியே தயாரித்துள்ளோம். அவர்களின் கோரிக்கைகள் உள்ளடங்கிய வரவு-செலவுத் திட்டத்தை அவர்களே தோற்கடிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைமைகளிடமும், மாநகர சபையில் முன்வைக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று பகிரங்கமாகவும், அன்பாகவும் கோரிக்கை விடுகின்றேன். சபையின் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்கும் வகையில் கட்சித் தலைவர்கள் செயற்படமாட்டார்கள் என்று நினைக்கிறேன் - என்றார். (எ-20)

# மணிவிழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், டிசெ. 10

கலாநிதி ஆறு.திருமுருகனின் மணிவிழாவும் 'திருமுகம் 60' மலர் வெளியீடும், இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கலும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வு, எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் இடம் பெறும். நிகழ்வில், வெளியீட்டுரையை சிவமலர் அனந்தசயனனும், ஏற்புரையை மணிவிழா நாய கன் கலாநிதி. ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவார்கள். (ம-ரி1)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 21 02 1981



மறைவு 09 12 2021

**அருட்சோதி கிருஷ்ணராசா (கண்ணன்)**

(சாரதி கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்)

அவர்கள் நேற்று (09.12.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
சகபணியாளர்-பிரியாந்தன் (ரமேஸ்)
அத்துல சோமஸ்ரீ
(கமநல அபிவிருத்தி திணைக்களம் யாழ்ப்பாணம்.)

(CS 817)1-6

# 26 நாள்களுக்குத் தேவையான மசகு எண்ணெய் இருப்பில்

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் இன்னும் 26 நாள்களுக்குப் போதுமான மசகு எண்ணெய் இருப்பில் உள்ளது. தொடர்ந்து மசகு எண்ணெய் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

டொலர் இழப்பு என்பது அமைச்சு மட்டத்தில் தீர்க்கப்படக் கூடிய பிரச்சினையல்ல. இதற்கு அமைச்சரோ அல்லது நாட்டின் தலைவரோ பொறுப்பல்ல.


இதுவரை 59 மில்லியன் டொலர் செலவழித்து 7 இலட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த நாள்களில் கொள்ளளவு குறைந்ததால் 26 நாள்களுக்குத் தேவையான மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மழைக்காலம் முடிவடைந்துள்ள தால் மின்சாரசபைக்கு எரி



பொருள் தேவைப்படலாம். தற்போது 65 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் எண்ணெய் இருப்பில் உள்ளது. எதிர்காலத்தில் தேவையான அளவைப் பெற்றுக் கொள்வது குறித்துக் கவனம் செலுத்தப்படும் - என்றார். (ம-4)

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 02 . 1981



மறைவு 09 . 12 . 2021

**அருட்சோதி கிருஷ்ணராசா (கண்ணன்)**

(சாரதி கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்)

காரைநகர், சந்தன்புளியடியை பிறப்பிடமாகவும் ஆயிலியை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்சோதி கிருஷ்ணராசா நேற்று (09.12.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் அருட்சோதி மற்றும் லோபாமுத்திரையின் அன்புப் புதல்வனும், கலையரசியின் அன்புக் கணவரும், அமரர் ஏரம்பநாதன், மற்றும் சரஸ்வதியின் மருமகனும், புவிந்தன், தனுஷன், பவித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற உதயராசா மற்றும் விஷ்வரூபன், பிரதீபா ஆகியோரின் சகோதரரும், முருகதாஸ், கார்த்திகாயினி, கலைவாணி, காலஞ்சென்ற அரவிந்தன் மற்றும் கேசவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் ஆயிலி இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புக்கு: 0776458279**

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 816) 1/6

# குறிஞ்சாக்கேணி படகு விபத்து: நகரசபைத் தலைவருக்கு மறியல்

திருமலை, டிசெ. 10

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப்பாலம் கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட, கிண்ணியா நகர சபைத் தலைவர் எஸ். எச்.எம்.நளீம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை நீதிமன்ற நீதிவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிவான் இந்த உத்தரரவை விதித்தார்.

அவருக்குப் பிணை வழங்குமாறு சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. குறித்த இடர் தொடர்பில் படகின் உரிமையாளர் மற்றும் அதனை இயக்கிய இருவர் உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களுக்கும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.10

"தொல்லியல் மற்றும் மரபுரிமை செயற்றிட்டங்களை எவ்வாறு உருவாக்குவது" எனும் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 199, கோவில் வீதி, நல்லூரிலுள்ள சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தில் இடம்பெறும். இதில் தொல்லியல் மற்றும் மரபுரிமையை ஆராய்வதற்கும் பாதுகாப்பதற்குமான புதிய முன்வைப்புகள் பரிசீலிக்கப்படும். தொல்லியல், பண்பாடு, கலாசாரத்துறை சார்ந்தவர்கள், மரபுரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆர்வமுடைய அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியியலாளர்
சி. உருத்திரலிங்கம்

# சுன்னாகம் தபால்நிலையக் கட்டட பிரசவத்தின் தாமதத்துக்கு யார் காரணம்?

**சுன்னாகம் தபால் நிலையக் கட்டட ஒப்பந்தத்தில் இடம்பெற்ற ஊழலை 'உதயன்' ஆதாரத்துடன் வெளிப்படுத்தியிருந்தான். இது தொடர்பில் பொறியியலாளர் தனது பார்வையில் சில விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றார்.**

ஒரு நிர்மாண ஒப்பந்தத்துக்கான வேலைகளை ஒப்பேற்றுவதில் இங்கு முக்கிய பங்களிப்பவர்கள் வேலை வழங்குநராகிய மாவட்டச் செயலர், அதன் 'பொறியியலாளராகிய' கட்டடத் திணைக்களம் (மத்தி) மற்றும் அதன் ஒப்பந்தகாரருமாவார். ஆனால் உதயனில் வெளியிடப்பட்ட புலனாய்வுக் கட்டுரையில் இவர்களது பங்களிப்புப் பற்றி பெரியளவில் கூறப்படவில்லை.

வடக்கில் ஒப்பந்தங்களில் நடக்கும் தில்லுமுல்லுகளுக்கு யாழ்ப்பாண மாவட்டம் மாத்திரம் விதிவிலக்கல்ல. ஒப்பந்த நிர்வாகத்தில் பொறியியல் துறையைச் சார்ந்தவர்களைத்தவிர ஏனையோரும் அதற்குள் முகர்ந்து பார்க்க முயலுவதால்தான் இச் சங்கடங்கள் தோன்றுகின்றன.

சுன்னாகம் தபால் நிலைய ஒப்பந்த முகாமைத்துவத்திலேற்பட்டிருந்த பின்வரும் தவறுகளே இந்நிர்மாண வேலைகளின் பின்னடைவுகளுக்கு ஒருவகையில் காரணங்கள். ஏற்கனவே தங்கள் பத்திரிகையில் உருப்பெருக்கி வில்லை மூலம் முன்கொணர்ந்த விடயங்களில் முக்கியமானவையாகவும் வேலைவழங்குநரின் ஆவணத் தவறுகளே.

சுன்னாகம் தபால் நிலையத்தின் சோகப் பிரச வத்தைப்பற்றி எம்மக்களுக்கும் எமது பிரதேச வளர்ச்சியில் பங்காளர்களாகக் காட்டிக் கொள்ளும் பெருந்தகையினோருக்கும் அறியத்தருவதில் வலது காலை எடுத்துவைத்த தங்கள் பத்திரிகையின் முயற்சியை பாராட்டுகிறோம். நிதியைப் பெற்றுக் கொடுத்தால் மட்டுமல்ல, அதனைக்கட்டிக்காக்கவும் உரிய முறையில் செயற்பட வேண்டும்.

மேற்கூறப்பட்டவாறு ஒப்பந்த முகாமைத்துவத்தில் ஏற்பட்ட தவறுகள் மழைக்காலம் என்றும் பாராமல் 16 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு பெரிய கொங்கிறீட் நிர்மாண வேலையைக் குறுகிய காலத்துக்குள் செய்து முடிக்கத் திணித்தமை. இவற்றுக்கு வேறுபல காரணங்களைக் கூற முற்பட்டா லும் இந்தக் காரணிகளையும் உள்வாங்கி அறிவில் ஆதவர்களாகிய பொறியியலாளர்களால் ஆலோசனை வழங்கியிருக்கமுடியும். தம்மிடம் ஒருவரும் இதைப்பற்றிக் கேட்பதில்லை என்று அவர்கள் பதில் சொல்லித் தப்பிக்கக்கூடும்.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த வேலையில் தாமதங்கள் தென்பட்டாலும் அதனைப் பொருட்படுத்தாது ஒப்பந்தக் காரருக்கு பிறிதொரு நிதி மூலமான சிறிய ஒப்பந்தங்களை தமது அதிகாரங்களுக்குற்பட்ட விதத்தில், ஆனால் நேர்கொண்ட பார்வையிலிருந்து விலகி அதனை வழங்கி இந்த ஒப்பந்தத்தை பின்னடையச் செய்துள்ளனர்.

கால நீடிப்பு வழங்காமலே ஒப்பந்தகாரரை வேலை செய்ய அனுமதித்தமை குற்றம். ஆனால் இக்காலத்தில் தமக்குரிய மேற்பார்வைக்கான சேவையை பொறியியலாளர் வழங்கத் தவறவேயில்லை.

வேலைகள் யாவும் 30.12.2019 முற்றுப் பெறாமலே பகுதியாக முற்றுப் பெற்றதாகக் கூறி சான்றிதழ் வழங்கியமையின் பின்னர் ஒப்பந்தக்காரரை வேலையைத் தொடரவிட்டமை ஒப்பந்த நியதிகளுக்கு அமைய தவறேயாகும்.

கலைக்கப்பட்ட சேதங்களை தவறான முறையில் காலம் பிந்தி அறவிடுவதற்கு துணை சென்றமை. இதனால் ஒப்பந்தகாரருக்கு நஷ்ட்டஈடு வழங்குவதற்கு சட்ட விதிகள் இருந்தாலும் அவற்றை உதா சீனம் செய்தமை. இவற்றுக்கான இழப்பீட்டை ஒப்பந்தக்காரர் கேட்க முனைந்தால் இவ் வீண் விரயத்துக்கு யார் பொறுப்பு?

ஒப்பந்த விதிகளின்படி ஒப்புதல் கடிதம் வாங்குவதற்கு ஒப்பந்தத்தில் இடமில்லை என்பது தெரிந்திருந்தும் அதனை பரிந்துரை செய்து வேலை வழங்குநருக்கு வழங்கியமை. ஒப்பந்த நியதிப்படி இறுதிக் கொடுப்பனவில் இவை உள்ளடக்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்க வேண்டும்.

வேலைகளில் தாமதங்கள் ஏற்படும் வேளைகளில் அவற்றை எவ்விதம் ஒப்பந்த விதிகளுக்க மைவாக முகாமைத்து வம் செய்யலாம் என்பதை ஆவணரீதியாக வழங்கத் தவறியமை.

முக்கிய ஆவணங்கள் தயாரிக்கும் பொழுது திகதிகளைத் தவறவிடுவது மிகவும் பெரும் குற்றமாகும். இச் செயலானது ஒரு தவறான வழிநடத்தலுக்கு முன்னோடியாக இருக்க வாய்ப்புண்டு.

தவிர்க்கமுடியாத காரணங்களால் கொடுப்பனவு தாமதப் படுத்தப்படும் பட்சத்தில் அவற்றுக்கான இழப்பீட்டை வட்டி மூலம் ஈடு செய்யும்படி ஒப்பந்த நிபந்தனைகள் கூறியும் அதனை நடைமுறைப்படுத்தத் தவறியமை. இந்தச் செய்கையால் அரச நிதி வீண் விரயமாகப் போகின்றதை அறியாதவரல்லர்.

மேற்படி ஒப்பந்த வேலைக்கான நிதியை ஒழுங்கு படுத்தியவர்கள் மேலதிகமாக வழங்கியதாக தங்கள் பத்திரிகை வாயிலாக அறிய நேர்ந்தாலும் பண முடைவு எவ்வாறு ஏற்பட்டது? நிதியைக் கையாண்ட விதத்தில் ஏதோ தவறு ஏற்பட்டுள்ளது போலும்.

இவற்றுக்கெல்லாம் நங்கூரம் அமைத்தவர்கள், காற்றுக்கென்ன வேலி என்ற மனப்பான்மையில் இயங்கும் அரச அதிகாரிகளா? அல்லது அறிந்தும் அறியாததாக தமது கடைக்கண் பார்வையிலேயே காலத்தை ஓட்டி மௌனராகம் பாடிக்கொண்டிருக்கும் தணிக்கை குழுவினரா?

மேற்கூறியன யாவும் சுன்னாகம் தபால்நிலையத்துக்கான கட்டடத்தை உரிய நேரத்துக்கு வழங்க முடியாமற் போனதற்கு காரணிகளாக அமைந்தாலும் இவற்றிற்கு மிக முக்கிய அடிப்படைக் காரணம் யாதெனில் காலம் பிந்தி எமக்குக் கிடைக்கும் அரச நிதியெனும் வரப்பிரசாதமே. அவற்றை சந்தர்ப்பத்துக்கேற்ப எவ்விதம் பாவித்து எமது திட்டங்களை ஒப்பந்த நியதிகளுக்கேற்ப நிறைவேற்றலாம் எனும் சிற்றறிவு அரச உயர் அதிகாரிகளிடமோ இல்லவே இல்லை. ஆனால் அரச பொறியியலாளர்களிடமோ இருந்தும் இல்லாமல் போகிறது.



# வேண்டுகின்றோம் கணபதியே!

வேண்டுகின்றோம் உன்னருளை!
வேறொன்றும் வேண்டுகிலோம் கணபதியே!!

உமாபதியின் கருணையினால் உதித்தனம் கணபதியே!
உன்னடிகள் வணங்குகின்றோம் நாம்!!

மாபாரதக் கதையதனை மாமேரு மலையிலன்று
பதித்தவெம் கணபதியே அருள்!!

குறுமுனியின் கமண்டலத்தைக் கவிழ்த்தன்று காவிரியைப்
பெருக வைத்த கஜமுகனே அருள்!!

வேழமுகத்தோனே! நால்வேதப் பொருளோனே!!
வேண்டுகின்றோம் இன்னருளைப் பொழி!!

மூவேழு நாளாயுன் அருள்வேண்டி நோற்றிருந்தோம்!!
முன்னவனே பொன்னடிகள் காட்டு!!
மொட்டரு மலர் கொண்டுனை இட்டமுடன் பூசித்தோம்!!
முத்தமிழை எங்களுக்குத் தா!!

செங்கரும்பும் இளநீரும் முக்கனியும் படைத்தோம் நாம்!
ஐங்கரனே கணபதியே அருள்!!

மூவெழு தினமாக உன்னருளை இறைஞ்சி நின்றோம்!
மூவாப்பெரு வாழ்வதனைத் தா!!

ஆனைமுகப் பரம்பொருளே ஆரணத்தின் உட்பொருளே!!
வாரணனே பூரணனே!! சரண்!!

முக்கண்ணன் முதல் மகனே! மூஷிக வாகனனே!!
விகட சக்கர கணபதியே அருள்!!

இருப்தொரு நாளாக உனைப்போற்றி நோற்றிருந்தோம்!
கருணையுடன் எங்களையும் பார்!!

வானவர்முன் நடம்புரிந்தவுனை
மதிக்காத வெண்மதி மேல்
காய்ந்த எம் கணபதியே சரண்!!

செய்கருமம் கைகூட்டிப் பீடும் பெருக்கும் எங்கள்
சங்கரனின் முதல் மகனே அருள்!!

நாதத்தின் வடிவோனே நால்வேதப் பொருளோனே
கனிவுடனே எங்களையும் பார்!!

கருணையுடன் நீ பார்த்தால்
எம் கடுவினைத் தொல்லையெல்லாம்
பரிதிமுன் பனித்துளியாய்ப் போகும்!!

தத்துவ நிலையெனக்குத் தந்து ஆட்கொண்டவனே
வித்தகனே விநாயகனே சரண்!!

உன்னருளை தாவென்று பெருகுமெம் கண்ணீரையுன்
கரமைந்தினின் ஒன்றாலே துடை!!

அடியவரெம் அன்பினிலே அகம் மகிழும் கஜமுகனே!!
அடியாரெமைக் கனிவுடனே பார்!!

கனிவுடனே நீர் பார்த்தாலெம்
வெவ்வினைத் தொடரெல்லாம்
காய்கதிர்முன் பனித்துளியாய் போகும்!!

வேண்டுவார் வேண்டுவதை
வேண்டும் வண்ணம் அருள்பவனே
வேண்டுமெம் வேண்டுதலை அருள்!!

வேண்டுகின்றோம் உன்னருளை!
வேண்டுகிறோமுன் பதமலரை!!
வேறென்ன வேண்டிடுவோம் நாம்!!

- முருகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி))

## பொது அறிவித்தல் - 2022

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொது மக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**1) வியாபார உரிம அனுமதிப் பத்திரம்**

சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்பவர்கள் 2022 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமம் / வரியினை 2022.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்**

1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதி திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்.

**3) ஆதன வரி செலுத்துதல்**

எமது சபைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் 2022.03.31 ஆம் திகதிக்கு முன் ஆதன வரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் 31.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரியை செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். 2022.03.31 ஆம் திகதிக்கு முன் வரி செலுத்த தவறின் 15% தண்டமும் வரியும் அறவிடப்படும்.

**4) கட்டடங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல், புதுப்பித்தல், திருத்துதல் கட்டணங்கள் அறவிடல்**

i) வலி வடக்கு பிரதேச எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், கிணறுகள், குழாய்க்கிணறுகள் அமைத்தல், கட்டடங்கள் விரிவாக்கல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன பிரதேச சபையின் அனுமதி பெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.

ii) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

iii) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டட அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல்**

2022 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2022.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**6) விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தகநிலைய உரிமையாளர்கள் / நிறுவனங்கள் / முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**7) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**

சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேச சபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படவும் வேண்டும்.

**8) மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**

வலி வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1Km தூரத்திற்குள் வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**9) படவரைஞரைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல்**

2022 ஆம் ஆண்டுக்கு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராகப் பதிவு செய்தவர்களும் 2022.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும் அல்லது புதுப்பித்துக்கொள்ளவும்.

**10) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்தும், மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தினால் கழிவுகள் அகற்றப்படும் என்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**11) பொது சுகாதாரம் பேணல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணிகளின் உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**12) இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணம் அறவிடப்படும்.**

இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணமாக ரூபா1000.00 அறவிடப்படும். இக்கட்டணத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை உரிய உப அலுவலகத்திலும் சனி,ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் உரிய உப அலுவலகத்துக்குரிய பொது நூலகத்திலும் செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். அனுமதிக்காக மேற்குறித்த இடங்களில் விண்ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இறப்பு தொடர்பாக கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**13) வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக**

சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்துக்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற தனியார் நிறுவனங்கள் பிரதேச சபையில் முறைப்படி அனுமதி பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும்.

**14) பிரதேச சபையால் வழங்கப்படும் இதர சேவைகள்**

1) குடிநீர் வழங்கல் சேவை

எமது பிரதேச சபைக்குட்பட்ட பொது மக்களிற்கான குடிநீர் விநியோகம் 1 லீற்றர் ரூபா 1.00 என்ற கட்டண அடிப்படையிலும் வேறுவகையான பயன்பாட்டிற்கு 1 லீற்றர் ரூபா 2.00 என்ற கட்டண அடிப்படையிலும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்துவதன் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2) கனரக வாகன சேவைகள்

மோட்டக்கிறேரர், பக்கோ, கலிபௌசர், றோலர் போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**

**10.12.2021.**

(CR 36169 ) (3 / 6)

## துணுக்காய்ப் பகுதி பல நோ.கூ.சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை :- 18 – 45
(கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது)

**களஞ்சிய பொறுப்பாளர் 202/12 வெற்றிடம் -01**

**சம்பள அளவுத்திட்டம் - 16780 - 150 x10 - 165 x10 - 19930 (4 / 2018 இன் படி)**

**தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்ட பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் / கொள்வனவு உத்தியோகத்தர் / கிளை மேற்பார்வையாளர் / கிளை முகாமையாளர் பதவியில் ஆகக்குறைந்தது இரண்டு(02) ஆண்டுகால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது நான்கு (04) ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது ஒரு (01) ஆண்டுகால ஆனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் சாதாரணதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

**களஞ்சிய முகாமையாளர் 208/14 வெற்றிடம் -03**

**சம்பள அளவுத்திட்டம் - 15960 - 135 x10 - 145 x10 - 18760 (4 / 2018 இன் படி)**

**தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்த 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப் பத்திரம் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடங்கி 06 பாடங்களுடனான சித்தி.

**எழுதுனர் 302/14 வெற்றிடம் - 02**

**சம்பள அளவுத்திட்டம் - 15960 - 135 x10 - 145 x10 - 18760 (4 / 2018 இன் படி)**

**தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்ட பதவியில் எழுதுனர் / காசாளர் / கணினிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டுகால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்ட பதவியில் எழுதுனர் / காசாளர் கணினிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது நான்கு (04) ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரணதரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடங்கி 06 பாடங்களுடனான சித்தி.

**எழுதுனர் 302/15 வெற்றிடம் - 01**

**சம்பள அளவுத்திட்டம் - 15545 - 130 x10 - 140 x10 - 18245 (4 / 2018 இன் படி)**

**தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர் / காசாளர் / கணினிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டுகால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது நான்கு (04) ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரணதரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடங்கி 06 பாடங்களுடனான சித்தி.

**விற்பனையுதவியாளர் 308/17 வெற்றிடம் -01**

**சம்பள அளவுத்திட்டம் - 14725 - 115 x10 - 130 x10 - 17175 (4 / 2018 இன் படி)**

**தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் கனிஷ்டதராதரப்பத்திரம்.

அல்லது

எட்டாம் தர கல்விச் சான்றிதழ்

**காவலாளி 315/17 வெற்றிடம் -01**

**சம்பள அளவுத்திட்டம் - 14725 - 115 x10 - 130 x10 - 17175 (4 / 2018 இன் படி)**

**தகைமைகள்**

அ. ஐந்தாம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சுயமாக தயாரித்து கல்வி தகைமை சான்றிதழ்களின் பிரதியுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு **தலைவர், துணுக்காய்ப் பகுதி பல நோ.கூ. சங்கம், துணுக்காய்.** எனும் முகவரிக்கு 27.12.2021ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**துணுக்காய்ப் பகுதி பல நோ.கூ.சங்கம்,**

(CR 36179)1-6

# In Ever Loving Memory of



Late.
**Mr.T.S.Thuraiappah**
*(C.C.S)*
*of Sandilippay North, Aladi Anaikoddai.*

From his Ever loving Children, in laws, Grand Children, Great Grand Children Loving in his thought always.

*Ever loving Daughter*
*V. Ambikai Indrarajah*

05.12.1905 10.12.1992

# ஆழ்ந்த அன்பான நினைவுகளுடன்

அமரர்

**த.ச. துரையப்பா அவர்கள்**

(C.C.S)
O.A யாழ். கச்சேரி
பிறந்த ஊர் சண்டிலிப்பாய் வடக்கு ஆடி.

எங்கள் உள்ளங்களில்
குடி கொண்டிருக்கும் எங்கள்
அருமை தந்தையின்
நினைவு



மக்கள்,
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்,
மருமக்கள்.

05.12.1905 10.12.1992

(CS 41534) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 01 . 1929



மறைவு
07 . 12 . 2021

## முத்தையா தங்கம்மா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா தங்கம்மா அவர்கள் கடந்த (07.12.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்திலிங்கம் முத்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னப்பு செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற வர்களான வயித்திலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம், தர்மராசா, தேவராசா, (ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்ற செல்வராசா மற்றும் யோகராசா (லண்டன்), தங்கராசா (சுஜி தளபாட தொழிலதிபர்) காலஞ்சென்ற அருமைநாயகி மற்றும் செல்வராணி, வரதராசா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் கமலாம்பிகை, செல்வராணிஅம்மா, மகேஸ்வரி, விமலாதேவி, பத்மாவதி, சிவரூபி, நவரத்தினராசா, கணேசலிங்கம், விமலா ஆகியோரின் அன்பு மாமியாரும், பேரப்பிள்ளைகளின் பாசமிகு பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் தாயகம் இல்லத்தில் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்பு : 077 628 3421**
**077 976 9587**

**தகவல்**
**குடும்பத்தினர்**

(CS 41536) (3/6)

# மரண அறிவித்தல்



## பாலசுப்பிரமணியம் புவனேஸ்வரி

குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளையை வதிவிடமாகக் கொண்ட பாலசுப்பிரமணியம் புவனேஸ்வரி நேற்று (09.12.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - முத்தாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவரின் அன்பு மனைவியும், பிரதீபன், பிரவீணா, பிரசாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மினி, வில்வராஜா, மீரா ஆகியோரின் அன்பு மாமியும், அக்ஷயன், அகலியன், சானுவின், விவர்சினி ஆகியோரின் பேர்த்தியும், சிவஞானேஸ்வரி, சிவதாசன், காலஞ்சென்ற கணேஸ்சநாதன், சிவணேஸ்சன், சிவகுமாரன், சத்தியபாமா, சிவபாலன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் சகோதரியும், இரத்தினசிங்கம், விக்னேஸ்வரி, விமலாதேவி, நளினி, காலஞ்சென்ற குகதாசன், மௌலிதரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குப்பிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குரும்பசிட்டி கிழக்கு,**
**தெல்லிப்பளை.**


**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 509 9596**
**077 373 2664**

(cs. 41532) (2.6)

# மரண அறிவித்தல்

## கந்தசாமி சுவாமிநாதன் (பழனி)

### (ஓய்வுநிலை பொறியியலாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)



வட்டு-மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மூளாய் வீதி, வட்டுத் தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சுவாமிநாதன் (பழனி) (ஓய்வுநிலை பொறியியலாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) அவர்கள் நேற்று (09.12.2021) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தலைமை ஆசிரியர் கந்தசாமி எமலிதவமணி தம்பதியரின் அன்பு மகனும், அராலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜாதேவி (ஓய்வுநிலை ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், தனுசா (அபிவிருத்தி உத்தியோகத்தர், கலாசார மத்திய நிலையம், சங்கானை), மற்றும் காலஞ்சென்ற துஷிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பேரின்பசிவம் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை) அவர்களின் அன்பு மாமனாரும், நிவேந்தன், மகிஷினி ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்றவர்களான பரமநாதன் (ஓய்வுநிலை தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம்), விஜயதேவி, கதிரவேல்நாதன் (ஓய்வுநிலை வரி மதிப்பீட்டாளர்), கோசலாதேவி, விமலாதேவி (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரநாதன் (ஓய்வுநிலை விமானப்படை அதிகாரி), மற்றும் கமலாதேவி, விபுலநாதன், அருட்பாநாதன் காலஞ்சென்ற ரத்தினாவதி, சிவகணேசமூர்த்தி மற்றும் லோகேஸ்வரி காலஞ்சென்ற குணவீரசிங்கி மற்றும் முருகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துஷிந்தன் இல்லம்,**
**மூளாய் வீதி, வட்டுத் தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 206 4065**

(CS 811)(1/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## A/L CHEMISTRY

(Tamil & English Medium)
2023-Chemical Calculation
2022-Physical Paper Class
திரு.சு.சுரேஸ்குமார் BSc (Hons) PGDE
(யாழ் / தேசிய பாடசாலை ஆசிரியர்)
T.P: 077 555 9028
Brown Road, Jaffna. — Kondavil Jaffna.
(CS 810) 1-6



## விற்பனைக்கு

நல்ல இன தென்னங்கன்று, கமுகங்கன்று, செவிழை தென்னை மற்றும் பல இன மரக்கண்டுகளும் பூங்கன்றுவகை மற்றும் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
நியூ லங்கா பாம் பலாலி வீதி, ஊரெழு. (கணேசா பாடசாலைக்கு அருகில்)
கிளை: K.K.S. வீதி, இணுவில். T.P.: 077 612 9343 077 279 0431
(CS 41535)(2.6)



## பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
பிற்பகல் 6.00 – 8.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்
077 069 8105 (CS 41449)(3.6)


## வாகன இறக்குமதிக்கு அடுத்த வருடமும் தடை!

நிதியமைச்சர் பஸில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 10
2022ஆம் ஆண்டில்கூட வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது - என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அறிக்கை ஒன்றை வெளியிட்டு, நிதியமைச்சர் இதனைத் தெரிவித்தார்.
இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துசெல்லும்நிலையில், வாகன இறக்குமதிக்கு சில மாதங்களுக்கு முன்னரே ராஜபக்ச அரசு தடை விதித்திருந்தது. இந்தநிலையிலேயே, குறித்த தடை அடுத்த வருடம் முழுவதும் நீடிக்கும் என்று நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
மேலும், அடுத்தாண்டு அரச ஊழியர்களின் ஆட்சேர்ப்பும் இடம்பெறாது என்றும் - நிதியமைச்சர் குறிப்பிட்டார். (த-இ)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவமணி இராசலிங்கம்

காரைநகர் நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல.28 சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி இராசலிங்கம் நேற்று (09.12.2021) வியாழனன்று காலமானார்.
அன்னார் செல்லையா இராசலிங்கத்தின் (யாழ் மாநகர சபை ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அருளம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா காமாட்சியின் மருமகளும், சுபாஜினி, நந்தகுமார், சிவாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கங்காதரன், நளாயினி, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வர்ஷாயினி, சிவாஞ்சலி, நிஜந்தன், துவாரகன், பிரசாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

28, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
077 4593 315, 076 040 2701

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 814)1-6

## அறிவித்தல்
### விசேட அற்றோர்ணி அதிகாரம் இரத்துச் செய்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசில் மல்லாவி யோகபுரம் இலக்கம் 6D/A இல் வசிக்கும் நமசிவாயம் வசந்தகுமார் (தேசிய அடையாள அட்டை (இல. 740063855V) ஆகிய எனக்கு, வவுனியா பிரசித்த நொத்தாரிசு ஏ.அருன்னியா அவர்களால் 2018.10.13 ஆம் திகதி எழுதி உறுதிப்படுத்திய பதிவாளர் அலுவலகம் - வடக்கு வலய அலுவலகம், யாழ்ப்பாணத்தில் 2019.01.30ஆம் திகதி வொலுயும் 118 நிரல் 49 நாட் புத்தக இலக்கம் 283 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இலக்கம் 127 உடைய விசேட அற்றோர்ணி அதிகாரப் பத்திரம் மூலம் வவுனியா, முல்லைத்தீவு, துணுக்காய், குலசிங்கம் வீதி, இலக்கம் 8D, முகவரியில் வசிக்கும் விமலாதேவி விஜயரஞ்ஜித் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 636672610V) இலக்கம் 127 என்பவரின் அற்றோர்ணி அதிகாரப் பத்திரத்தை 2021.12.10ஆம் திகதியிலிருந்து இரத்து செய்து செல்லுபடியற்றதாக்கியது பற்றியும், இனிமேலும் கூறப்பட்ட அற்றோர்ணி அதிகாரப் பத்திரம் மூலம் விமலாதேவி விஜயரஞ்ஜித் ஆகியவர் சார்பில் மற்றும் அவருடைய பெயரில் செய்யப்பட்ட எந்தவொரு செயலும் இரத்து செய்யப்பட்ட தினத்தின் பின்னர் செல்லுபடியோ அல்லது சட்டபூர்வ அதிகாரமோ அற்றதெனவும், இலங்கை அரசாங்கமும் அனைத்து பொது மக்களும் ஏனைய அனைவரும் இத்தால் அறிந்துகொள்ளவும்.

நமசிவாயம் வசந்தகுமார்
(தேசிய அடையாள அட்டை
இலக்கம் 740063855V)

(cr.36182) (2.6)

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
### 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டமானது மீண்டுவரும் வருமானமாக ரூபா. 79,673,546.30 ஆகவும் மீண்டுவரும் செலவினமாக ரூபா. 69,848,860.00 ஆகவும் எதிர்பார்த்த மானியம் உட்பட மூலதனச் செலவினமாக ரூபா. 47,824,400.00 ஆகவும் அமையும் வகையில் தயாரிக்கப்பட்டு சபையினது VSTPS/2021/12/54/553 இலக்க 2021.12.07 ஆம் திகதிய தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

த.யோகராஜா,
தவிசாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

(cr 36178) (2.6)

## திருத்தம்
### கேள்வி அறிவித்தல்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
சபைநிதி வேலைத்திட்டம் 2021 – கட்டம் IV.


07.12.2021ம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

1. இல. 8 சுன்னாகம் நூலகத் திருத்த வேலை மதிப்பீட்டுத்தொகை (Mn)1.136 ஆகவும், கேள்விப்பிணை தொகை ரூ.12,000.00 ஆகவும் மாற்றப்படுகின்றது.
2. இல. 10 சுன்னாகம் உப அலுவலகம், மீன் சந்தை, மரக்கறிச்சந்தை மலசல கூடத் திருத்தவேலை மதிப்பீட்டுத்தொகை (Mn) 2.036 ஆகவும், கேள்விப்பிணை தொகை ரூ.21,000.00 ஆகவும் மாற்றப்படுகின்றது.

க.தர்ஷன்,
தவிசாளர்,
பிரதேசசபை பெறுகைக்குழு.வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம். 10.12.2021

(cr.36180) (2.6)

## மரண அறிவித்தல்



### திரு. செல்லையா சிவபாலராஜா

முல்லைத்தீவு பொக்கனையை பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.செல்லையா சிவபாலராஜா அவர்கள் நேற்று (09.12.2021) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா கனகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், கருணகலாவின் (சுகி) அன்புக் கணவரும், தவராசா, யோகராசா, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கௌசியா (ஆசிரியை), சசியா (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன் (ஆசிரியர்), மாதுளன் (பிராந்திய முகாமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்ஷாந்தின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தீபன் - 076 786 2507
மாதுளன் - 077 110 7520

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்.

(CR 5734)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 11 . 1942



மறைவு 09 . 12 . 2021

### திரு. சின்னப்பா கணபதிப்பிள்ளை

மண்டைதீவு 06ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் மண்டைதீவு 08ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா கணபதிப்பிள்ளை நேற்று (09.12.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், நாகரெத்தினம் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிகரன், மதிவதனி, மதிவாணி, மதியழகன், கஜந்தினி, கஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நடராசா, வேலுப்பிள்ளை, இராசம்மா, செல்லம்மா, இராசரெத்தினம் மற்றும் தில்லைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

08ஆம் வட்டாரம், மண்டைதீவு.

தகவல் :
திரு.ச.சத்தியசீலன் (சத்தி)
-மருமகன்

(CS 812)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாடாளுமன்றின்...

ளுமன்ற அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும் விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, கூடி தீர்மானிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

### காயமடைந்த...

ருந்து யாழ்ப்பாணம் பிரதான வீதியால் கடந்த 7ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபொழுது நாற்சந்தியில் அதிவேகமாக வந்த வாகனத்துடன் இடம்பெற்ற விபத்தில் இலட்சுமணன் படுகாயமடைந்திருந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், உயிரிழந்தார்.

மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணைஅதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (த-26)

### பால்மா...

அதிகரிக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கால்நடை இராஜாங்க அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திரவப் பாலில் தன்னிறைவு பெற்ற நாட்டுக்கான செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (த-இ)

### காணாமலாக்கப்பட்டோருக்கு...

டவர்களின் உறவுகள் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் இந்த போராட்டம் வடக்கு- கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் நாவலர் வீதியிலுள்ள ஐ.நா. உயர்ஸ்தானிகர் களஅலுவலக முன்றிலிலும், வவுனியாவில் பழைய பேருந்து தரிப்பிடத்திலும், கிளிநொச்சியில் கந்தசுவாமி கோவில் முன்றிலும், முல்லைத்தீவில், தொடர்போராட்டம் முன்னெடுக்கப்படும் பகுதியிலும் மன்னாரில் பிரதான பேருந்து தரிப்பிடத்திலும், திருகோணமலையில் பிரதான பேருந்து தரிப்பிடத்திலும், மட்டக்களப்பில் காந்தி பூங்கா முன்றிலும், அம்பாறையில் கல்முனையிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக தமது உறவுகளைத் தேடி தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் உறவுகள் உள்நாட்டில் தமக்கு நீதி கிடைக்கவில்லை என தெரிவித்து சர்வதேசத்திடம் நீதி வேண்டி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் மனித உரிமைகள் தினமான இன்று போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். இதில் மத, கட்சிபேதங்களைக் கடந்து தமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-7)

### பயங்கரவாதத்...

டுள்ளார். இளம் கவிஞர் ஒருவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் 18 மாதங்களுக்கு மேலாக சிறையில் உள்ளார். இந்தநிலையில் அவரை பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபணை இல்லை என தற்போது சட்டமா அதிபர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. எதற்காக 18 மாதங்கள் எடுத்தன?

எனவே, பயங்கரவாதத் தடைச்சட்டமானது அச்சுறுத்துவதற்காகவும், குரல் எழுப்புபவர்களை மௌனிக்க வைக்கவும், எதிராளிகளை சிறையில் அடைக்கவுமே பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது தற்காலிகமாக கொண்டுவரப்பட்டது. எனவே, அதில் திருத்தங்கள் அவசியம். தடுத்துவைக்கும் கால எல்லை குறைக்கப்பட வேண்டும், சட்டத்தரணிகளை சந்திக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு ஜனநாயக அம்சங்கள் அடங்கிய வகையில் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல்வாதிகளின் வழக்குகளை தொடர்ந்து வாபஸ் பெற்றுவருவது திணைக்களத்தின் கௌரவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதுடன் நாடாளுமன்றத்துக்கும் நல்லதில்லை. அதனால் இதுதொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கவேண்டும்-" என்றார். (த-44)

### வசந்த...

தொற்றுக் காரணமாக காலமானதையடுத்து ஏற்பட்ட புதிய ஆளுநராக வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

போரின் இறுதியில் கடற்படை தளபதியாக கடமையாற்றிய வசந்த கரன்னகொட, கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டார்.

கடந்த ராஜபக்ச அரசின் காலத்தில் போக்குவரத்து அமைச்சின் செயலாளராகவும் பதவி வகித்தார்.

கோத்தாபய அரசு பதவியேற்றதை தொடர்ந்து, அவர் மீதான வழக்கு முடிக்கப்பட்டது. இது உள்ளூரிலும், சர்வதேச அளவிலும் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானது. இந்தநிலையில், கரன்னகொடவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆளுநராக நியமித்துள்ளார். (த-இ)

### புதிய...

புதிய பஸ் நிலையத்திலிருந்தே ஆரம்பிக்கப்படும் என்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தனியாரின் உள்ளூர் சேவை பஸ்கள், நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு தற்போது இயங்கிவரும் இடங்களில் 10 நிமிடங்கள் தரித்துநின்று, பயணிகளை ஏற்றிச்செல்லும். அதேபோல் வெளியிடங்களிலிருந்து வரும் பிரயாணிகள் நெடுந்தூர பஸ் நிலையத்தில் இறக்கப்படுவர்.

இ.போ.ச. பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்டங்களுக்குச்செல்லும், நீண்ட தூரத்துக்குப் பயணிக்கும் பெரிய பஸ்கள், மருத்துவமனை வீதியூடாக சத்திரச் சந்தியை அடைந்து, கே.கே.எஸ். வீதியூடாகச் சென்று, பிரதான வீதியை அடைந்து, வெளிமாவட்டங்களுக்கான பயணத்தை மேற்கொள்ளும். வெளிமாவட்டங்களிலிருந்து வரும் பஸ்களும் இந்தப் பாதையைத்தான் பயன்படுத்தவேண்டும். இந்த பாதை ஒழுங்கு உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இ.போ.ச. பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்டங்களுக்குச்செல்லும், நீண்ட தூரத்துக்குப் பயணிக்கும் பெரிய பஸ்கள் மருத்துவமனை வீதியூடாக வேம்படிச் சந்திக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

### மருந்து,...

யாவசிய மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதுகூட நிச்சயமற்ற விடயமாக மாறியுள்ளது என்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தீர்மானம் மிக்கவை என்றும், துரதிர்ஷ்டவசமாக நாடு ஆழமான படுகுழியில் மூழ்கிக் கொண்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று அரசாங்கம், உலகம் முழுவதும் சென்று நாடுகளின் முன் பணிந்து, டொலரைக் கேட்டுமண்டியிடுகின்றது.

ஒரு புறம் நாட்டில் மதவாதத்தையும், இனவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் விதைக்கும்அரசாங்கம், தேசபக்தி என்ற முத்திரையைக் குத்திக்கொண்டு கட்டார், ஓமான் உள்ளிட்ட நாடுகளிடம்கூட டொலரை பெற்றுக் கொள்வதற்காக அலைந்து கொண்டிருக்கின்றது. இது அரசாங்கத்தின் இரு நாக்குடைய அரசியல். என்றும் கூறினார்.

ஸ்திரமற்ற இலங்கைக்கு எந்தவொரு முதலீட்டாளர்களும் வருகை தரவில்லை.

கடன் தரப்படுத்தலில் இலங்கை தற்போது நெருக்கடியான கட்டத்தில் இருப்பதால் சலுகை வட்டியில் கடன்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் கூட இல்லை. நிதி நிர்வாகத்தின் தோல்வியே இந்த அவலத்துக்கு காரணம். இந்த அரசாங்கம் தனது பிரபலத்தை தக்க வைத்துக்கொள்வதற்காகவே அன்றைய நாளுக்குரிய சுற்றுலாஅரசியலை மேற்கொள்கின்றது. சிறந்த ஆட்சிக்கான எந்த அறிகுறியையும் அரசாங்கம் காட்டவில்லை - என்று சஜித் மேலும் தெரிவித்தார். (த-இ)

### இறந்து,...

ணைகளை மேற்கொண்டு, அடக்கம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில், செம்மலை, கொக்கிளாய் கடற்கரைப் பகுதிகளில் கடந்த காலங்களிலும் உயிருடன் டொல்பின்வகை கடல்வாழ் உயிரினங்கள் கரை ஒதுங்கியுள்ளன. (த-19)

### மூழ்கும்,...

அளவுக்கு மனநலம் பாதிக்கப்படவில்லை என்றும், கட்சியின் மறுசீரமைப்பு பணிகளை விரைவில் முழுமையடைய செய்யுமாறும் ஐக்கிய தேசிய கட்சியினருக்கு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏடுகளில் எழுதப்பட்ட கணக்கு விவரங்களில் எந்தவிதமான பலனும் இல்லை. மக்களிடம் பணம் இல்லை என்பதே யதார்த்தமான உண்மை. மக்கள் மயப்பட்ட பொருளாதாரத்தை நோக்கி விரைவாகச்செல்ல வேண்டும். நல்லாட்சி காலத்தில் அதிகமான கடன் தொகை செலுத்தியமையால் அபிவிருத்தி வேகம் மட்டுப்பட்டது. ஆனால் மூன்று வேளையும் உணவை மக்கள் தடையின்றி பெற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதார சூழலை உருவாக்கினோம்.

பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. மூழ்கும் கப்பலில் ஏறும் அளவுக்கு நான் மனநலம் பாதிக்கப்பட வில்லை. எனவே, கட்சியை மறுசீரமைக்கும் பணிகளை விரைவில் முழுமையடைய செய்யுங்கள் - என்று ரணில் தெரிவித்தார். (த-இ)

### கர்ப்பிணிகளுக்கு,...

பேறு மருத்துவர்கள் நிறுவகத்தின் தடுப்பூசி வழிகாட்டல் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இது பற்றி குறித்த நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் பிரதீப் டி சில்வா மேலும் தெரிவிக்கையில்,

6 மாதங்களுக்கு மேல் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி போட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை, 60 கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனாத் தொற்றால் இறந்துள்ளனர்.

எனினும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, கொரோனா காரணமான இறப்பு மற்றும் தாய்வழி நோயுற்றவர்களின் எண்ணிக்கையில் கணிசமான குறைவு ஏற்பட்டுள்ளது.

தொற்றுக் காரணமாக கர்ப்பிணித் தாய்மார்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆனால், அவர்களில் யாரும் ஆபத்தான நிலையில் இல்லை. இது தடுப்பூசி திட்டத்தின் விளைவாகும்.

எனவே, அவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசியை வெற்றிகரமாக வழங்க வேண்டும். இது கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் நோய் அபாயத்தைக் குறைக்கும்- என்று குறித்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார். (த-இ)

## பாலியல் தொந்தரவு: குடும்பஸ்தருக்கு வலைவீச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 10

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கச்சாய் பகுதியில் வசித்துவரும் குடும்பப் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாகத் தெரிவிக்கப்படும் நபரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

குறித்த குடும்பப்பெண்ணின் கணவரும் பிள்ளைகளும் வெளியில் சென்றிருந்தவேளை, அயல்வீட்டிலுள்ள குடும்பத்தலைவர், அந்தப் பெண்ணின் வீட்டுக்குச்சென்று, அவருடன் முரண்பட்டார். பின்னர், அந்தப் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

அது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டநிலையில், பொலிஸார் குடும்பத்தலைவரைத் தேடிவருகின்றனர். (த-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ச அரசால் ஒருவேளை உணவுக்கே மக்கள் திண்டாட்டம்

## ஐ.தே.க. சுட்டிக்காட்டு



**கொழும்பு, டிசெ. 10**

**ஐ.தே.க. ஆட்சியில் மூன்று வேளையும் உணவு உண்ட மக்கள் தற்போதைய ஆட்சியில் ஒருவேளை உணவை உண்பதற்கும் சிரமப்படுகின்ற னர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசால் நாட்டு மக்கள் கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அடுத்த ஆண்டில் இந்தக் கடன் சுமையால் நாட்டினதும், மக்களினதும் பொரு ளாதாரம் வீழ்ச்சியடையும். மக்கள் தமது கருத்துக் களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்கியதால், நல்லாட்சி அரசை அவர்கள் கோழைகள் என்று வரையறுத்தனர். எனினும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசாகவே நாம் செயற்பட்டோம்.

பலருக்கு அது கோழைத்தனமாகத் தோன்றியது. அவ்வாறு எம்மைக் கோழைகள் என்று நினைத்த வர்க ளும் இப்போது இந்த அரசின் கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எமது ஆட்சிக் காலத்தில் அரசை சமூக வலைத்தளங் களில் விமர்சிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. இன்று அரசுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கருத் துக்களை வெளியிடும் இளைஞர்கள் பயங்கரவாத குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படுகின்றனர். பொலிஸார் ஊடாக மக்களின் கருத் துச் சுதந்திரம் முடக்கப்படுகின்றது. அரசின் முட்டாள்தனமான செயற் பாடுகளால் பொது மக்களே பாதிக்கப் பட்டுள்ளனர். அரசிடம் போதிய ளவு நிதி கையி ருப்பில் இல்லை என்பதால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. சமையல் எரிவாயு சிலிண்டர்களை வீடுகளில் வைத்திருப்பவர்கள் வெடிகுண்டை வீட்டில் வைத்திருப்பதைப்போல் அச்சத்துடனேயே இருக்கின்றனர்.

சர்வதேச ஒத்துழைப்புக்கள் பூச்சிய மான நிலை யில் உள்ளன. இலங்கையின் நிலையற்ற செயற் பாடுகளால் சீனாவும் சினம் கொண்டுள்ளது. மறு புறம் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை மீது சினம் கொண்டுள்ளன.

இலங்கையில் பொருளாதார முகாமைத்துவம் இல்லை. ஏனைய நாடுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால், இலங்கை பின் னோக்கிச் சென்று கொண் டிருக்கின்றது- என்றார். (ம-4,22)


A 2D-Drawing 3D-Modeling Civil & Mech
Auto CAD
LINK:077 5116320 - 071 8617972



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை - 12 லட்சம்
(லங்கா பாம் அருகாமை)

**077 911 6983**
**077 2880 152**

(CS 815 A) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ் சுன்னாகம் நகரத்தின் மத்தியில் K.K.S வீதியில் இருந்து 200M தூரத்தில் (இலங்கை வங்கி முன் வீதியில்)
12 பரப்புக் காணி விற்பனைக்கு.
1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும்.
தொடர்பு: **076 8909 259, 077 0150 353**

(CS 815 B) 1-6

## காணி விற்பனைக்கு

கோப்பாய் - உரும்பிராய் பிரதான வீதியில் இருந்து 500M தூரத்தில் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்கு. 1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப் படும். (உரும்பிராய் கிருஸ்ணன் கோவில் சந்தி அருகாமை).

**077 6585 999**
**077 6234 204**

(CS 815 C) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 m தூரம்.
பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: **077 81 47 389, 077 61 47 333**

(CS 41537) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பெரியவிளான் அந்தோனியார் வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
**நிலப்பரப்பு:**
1 3/4 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் விளான் சந்தியில் இருந்து 500M தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
**077 61 47 333**
**077 81 47 389**




(CS 8091) 1-6


# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 09 . 1951

மறைவு 09 . 12 . 2021

## திருமதி பாக்கியநாதன் சிவபாக்கியம்

சித்தன்மாவடி வீதி, கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிட மாகவும் கொண்ட பாக்கியநாதன் சிவபாக்கியம் நேற்று (09.12.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி நவரத்தினம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பாக்கியநாதனின் (ஓய்வுபெற்ற சேவைக் கால ஆசிரிய ஆலோசகர், விஞ்ஞானம்-தென்மராட்சி) பாசமிகு மனைவி யும், சசீவன் (ஆசிரியர், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), ரஜீவன் (London) ஆகியோரின் அன்புத் தாயாரும், துவாரகா (ஆசிரியை, யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), வாணிஸ்ரீ (ஆசிரியை, யா/மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பகலவனின் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்ற குமாரசாமி, முருகையா ஆகியோரின் பாசமிகு சகோரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புக்கு: 021 2057822**

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 5735) 1/6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.